நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்

06/11/03

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 11 (06.11.2003) வியாழக்கிழமை இதழ் :37

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உங்கள் உறவுகளுடன்

INTERNET

மூலமாக உறவாட,
உள்ளூர், வெளியூர்
துரித தொலைத் தொடர்புகட்கு

'திருமுருகன் கொம் நெற்'

இல. 46, ஆடியபாதம் வீதி,
(ப. நோ. கூ. ச. முன்பாக)
திருநெல்வேலி.
T.P.021-222-7310

(சீ-1771)

### அரசியல் நெருக்கடி தீவிரமடைகிறது

# அவசரகால நிலை நாடுமுழுவதும் நேற்று மாலை முதல் பிரகடனம்!



அரசியல் அமைப்பில் 155 ஆவது பிரிவின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள இந்த அவசரகால நிலையின் மூலம்-

## ஜனாதிபதி சந்திரிகா அவசர நடவடிக்கை

(கொழும்பு)

**நாடு முழுவதும் அவசரகால நிலை நேற்றுமாலை முதல் அமுல்செய்யப்பட்டுள்ளது. மூன்று முக்கிய அமைச்சர்களைப் பதவிநீக்கம் செய்து, நாடாளு மன்றக் கூட்டத்தொடரை இரண்டுவார காலத்துக்கு ஒத்திவைத்த ஜனாதிபதி சந்திரிகா, அடுத்த நடவடிக்கையாக அவசரகாலச் சட்டத்தை அமுல் செய்துள்ளார்.**

எவரையும் கைதுசெய்வதற்கும், அரசியல் நடவடிக்கைகளைத் தடை செய்வதற்குமான பரந்தளவிலான அதிகாரங்களை படையினருக்கு வழங்கியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார்.

இந்த அவசரகாலச் சட்டத்தின் கீழ், எந்த வேளையில் எவரையும் எதுவித கைதாணை அல்லது நீதிமன்ற விண்ணப்பமுமின்றிக் கைது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு விவகாரங்களில் ஜனாதிபதிக்கே கூடுதல் அதிகாரம்

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதிக்கே கூடுதல் அதிகாரம் இருப்பதாக உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா விடுத்திருந்த வேண்டுகோளுக்கமைய விசாரணைகளை நடத்திய உயர்நீதிமன்றம், நேற்று இந்த முடிவை அறிவித்தது.

முப்படைத் தளபதியாகவும் இருப்பவர் என்ற வகையில், ஜனாதிபதிக்கே பாதுகாப்பு விடயங்களில் கூடுதல் அதிகாரம் இருக் (10 ஆம் பக்கம பார்க்க)

## நிதியமைச்சையும் விரைவில் ஜனாதிபதி கையேற்பார்!

(கொழும்பு)

திறைசேரி செயலாளர் சரித்த ரத்வத்தையை - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நேற்றுமாலை திடீரென பதவிநீக்கம் செய்துள்ளார்.

மூன்று முக்கிய அமைச்சர்களை நேற்றுமுன்தினம் பதவிநீக்கம் செய்த ஜனாதிபதி சந்திரிகா, நேற்று திறைசேரி செயலாளரையும் பதவிநீககினார்.

அத்துடன் பிந்திய அரசியல் நிலவரங்களின்படி, நிதியமைச்சையும் ஜனாதிபதி சந்திரிகா தன்வசம் எடுத்துக்கொள்ளலாம் என செய்திகள் தெரிவித்தன.

சரித்த ரத்வத்த - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமானவராக இருந்ததாலேயே பதவிநீக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

## பிரதமர் மீதான நம்பிக்கை தீர்மானம் 127 எம்.பிக்கள் கையெழுத்திட்டனர்!

### சபாநாயகரிடம் நேற்று கையளிப்பு


பிரதமர் மீதான நம்பிக்கைப் பிரேரணைக்கு 127 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவுதெரிவித்து கையெழுத்திட்ட மகஜர் நேற்று சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டதாக ஐ.தே.கவின் பிரதம கொறடா மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நேற்று அலரிமாளிகையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். பிரதமர் மீதான நம்பிக்கை தீர்மானத்துக்கு ஆதரவாக 127 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர். இந்த நம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளை சீர்குலைத்து குழப்ப நிலைக்குள் தள்ளவேண்டாம்!

### ஜனாதிபதியிடம் கூட்டமைப்பு வேண்டுகோள்



## ஏ-9 பாதை வழமைபோல!

(கிளிநொச்சி)

கண்டி வீதி மக்கள் போக்குவரத்துக்காகத் தொடர்ந்தும் திறந்

...சோ செயலாளரையும் பதவிநீக்கினார். ...பட்டதாகக் கூறப்படுகின்றது.



அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை நேற்றுமாலை சந்தித்த பின்னர் வெள்ளை மாளிகைக்கு வெளியே செய்தியாளர்களுடன் உரையாடும் பிரதமர்.

# சமாதான முயற்சிகளை சீர்குலைத்து குழப்ப நிலைக்குள் தள்ளவேண்டாம்!

## ஜனாதிபதியிடம் கூட்டமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளைச் சீர்குலைத்து - அதனை ஓர் நிச்சயமற்ற நிலைக்குத் தள்ளும் முயற்சிகளை கைவிடுமாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக் கேட்டுள்ளது.

நேற்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் - தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர முன்னணி (சுரேஸ் அணி) ஆகியன ஒன்றுசேர்ந்து கூட்டாக வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

(10 ஆம் பக்கம் பார்க்க)

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 பாதை வழமைபோல!

(கிளிநொச்சி)

கண்டி வீதி மக்கள் போக்குவரத்துக்காகத் தொடர்ந்தும் திறந்திருக்குமென விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

வீதி மூடப்பட்டுள்ளதாக பரவிவரும் வதந்திகளை நம்பவேண்டாம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஐ.தே.கட்சி அமைச்சர்களை கைதுசெய்வதற்குத் திட்டம்!

(கொழும்பு)

அவசரகால சட்டத்தின்கீழ்- முன்னாள் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க உட்பட, ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்கள் எந்தநேரத்திலும் கைதுசெய்யப்படலாமென, ஜனாதிபதி செயலக வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

நேற்றுமுதல் அவசரகாலச் சட்டத்தினை அரசாங்கம் அமுல்படுத்தியிருந்தது. இதன்பின் நேற்றுமாலை ஜனாதிபதி மாளிகையில் முக்கிய சில அமைச்சர்களைக் கைதுசெய்வதற்கான குற்றப்பட்டியல் தயாரிக்கப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்தம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்!

## லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தநிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கை என்பவற்றை நடைமுறைப்படுத்துவதில் எந்த மாற்றமும் இல்லை என்று, ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துவெளியிட்ட லக்ஷ்மன் கதிர்காமர் - நாட்டில் மீண்டும் போர்ஒன்று ஏற்படுவதை ஜனாதிபதியோ, பொதுஜன ஐக்கிய முன்னணியோ விரும்பவில்லை.

ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டைத் தெரியப்படுத்த, தான் பணிக்கப்பட்டுள்ளதாகவும் கதிர்காமர் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக புரிந்துணர்வு உடன் படிக்கையை- ஜனாதிபதி சந்திரிகா மற்றும் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் விமர்சித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தொிவித்ததாவது - நாட்டின் இறைமையையும், பாதுகாப்பையும் கவனத்தில் கொண்டே ஜனாதிபதி



(10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் மாற்றங்கள்; இந்தியா அதிர்ச்சி

(புதுடெல்கி)

இலங்கையில் ஏற்பட்டுள்ள புதிய அரசியல் சூழ்நிலை குறித்து, இந்திய அரசாங்கம் அதிர்ச்சியடைந்திருப்பதாக தெரிவித்துள்ளது.

மூன்று முக்கிய அமைச்சர்கள் பதவி நீக்கப்பட்ட பின்னர் இலங்கையில் அரசியல் சூழல் மாற்றமடைந்திருப்பது குறித்தே, இந்தியா அதிர்ச்சி வெளியிட்டுள்ளது.

இது குறித்து இந்திய வெளியு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நல்லூர் பிரதேச சபை
## 2004 ஆம் ஆண்டுக்கான
# கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையங்கள் என்பவற்றை 2004 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2004 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதிவரை குத்தகைக்கு விடுவதற்கு கேள்விகள் 14.11.2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிவரை நல்லூர் பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியுடன் இரு பிரதிகளை செயலாளர், நல்லூர் பிரதேசசபை, திருநெல்வேலி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு, தாபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல்வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட மீளளிக்கமுடியாத படிவக்கட்டணமும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமும் செலுத்தி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 12.11.2003 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையை கொண்டுவருதல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச் சந்தை, கொக்குவில் சந்தை என்பவற்றுக்கு விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின் ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 15,00,000.00 இற்கும் ரூபா 200,000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரங்களை சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்விதொகையின் மூன்றிலொரு பகுதியை 28.11.2003 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ளல் வேண்டும்.

### குறிப்பு:

1. திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல.I,II கொக்குவில் உபஅலுவலக இறைச்சிக்கடைகள் ஆகியவற்றின் மூன்றுமாத வாடகை ஒப்பந்தம் செய்யப்படும் தினத்தில் செலுத்தப்படவேண்டும்.
2. சந்தைகளைக் குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பெறுமதியின் மூன்று வீதத்திற்கு மேல் சந்தை வரி அறவிடக்கூடாது.
3. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 2 இற்கும் மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 3 இற்கும்மேல் பாதுகாப்புக்கட்டணம் அறவிடக்கூடாது.
4. தங்களினால் கோரப்படும் கேள்வித்தொகைக்குப் புறம்பாக தொகையின் 20 வீதம் வற்வரியாக செலுத்தப்படல்வேண்டும். மேற்படி தொகையும் விண்ணப்பப் படிவத்தில் காட்டப்படுதல் வேண்டும்.
5. கேள்விப்பத்திரத்தொகையுடன் அதற்குரிய 20 வீத வற்வரி செலுத்தப்படுதல் வேண்டும்.
6. இறைச்சிக்கடைக்கு விண்ணப்படிவம் பெறுபவர்கள் தங்களது முன்னனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும் முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடம் இருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

| சந்தைகள் இறைச்சிக்கடைகள் துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையங்கள் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|
| **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1. திருநெல்வேலிச் சந்தையும், துவிச்சக்கர வண்டிப் பாது காப்பு நிலையத்துடன் | 1000.00 | 15,000.00 | 4624362.00 |
| 2.திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல. I | 350.00 | 5,000.00 | 84,000.00 |
| 3. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல. II | 350.00 | 5,000.00 | 54,100.00 |
| **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1. கொக்குவில் குளப்பிட்டிச்சந்தையும் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் | 1000.00 | 10,000.00 | 210,010.00 |
| 2. கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 350.00 | 5,000.00 | 126,000.00 |
| 3. கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 350.00 | 5,000.00 | 52,270.00 |
| 4. கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக்கடை | 350.00 | 5,000.00 | 210,000.00 |
| 5. கொக்குவில் உபஅலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 350.00 | 5,000.00 | 52,500.00 |
| 6. கோண்டாவில் ஸ்ரேசனடி மரக்கறிச்சந்தையும் மாட்டிறைச்சிக்கடையும் | 350.00 | 5,000.00 | 52,500.00 |
| 7. கோண்டாவில் வடக்கு அரசடி வீதி மீன் சந்தை | 100.00 | 500.00 | 1,115.00 |

அரசடி வீதி மீன் சந்தைக்கு விண்ணப்பப்படிவம் கோருபவர் அதற்குரிய இடத்தை தெரிவு செய்து காணி, உரிமையாளரின் சம்மதக்கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்

**நல்லூர் பிரதேச சபை,**
**திருநெல்வேலி,**
**03.11.2003**

(சி1776)

**செல்லையா செல்வரத்தினம்**
**செயலாளர்**
**நல்லூர் பிரதேசசபை**

## சாவகச்சேரியில் விபத்துக்குள்ளான
# ஈ.பி.டி.பியினரின் மோட்டார் சைக்கிளை ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவு!

இராணுவ வாகனத்துடன் விபத்துக்குள்ளாகி, சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஈ.பி.டி.பி அமைப்பிற்கு சொந்தமான மோட்டார் சைக்கிளொன்றை மீளக்கையளிக்க சாவகச்சேரி நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஊர்காவற்துறைப்பகுதியிலுள்ள ஈ.பி.டி.பி முகாமொன்றிற்குப் பாதுகாப்பளித்துவரும் பொலிசார் ஒருவர், குறித்த மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளையே அது இராணுவ வாகனத்துடன் விபத்துக்குள்ளாகியிருந்தது.

கடந்த மேமாத நடுப்பகுதியில் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் முன்பாக இடம்பெற்ற இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திவந்த ஏ.எல்.என்.விடட்டஸ் எனும் குறித்த பொலிஸார் சம்பவ இடத்திலேயே பலியாகியிருந்தார்.

இந்த நிலையில், தடுத்துவைக்கப்பட்டுள்ள தமது மோட்டார் சைக்கிளை கையளிக்குமாறு ஈ.பி.டி.பி அமைப்பினால் நீதிமன்றிற்கு கோரிக்கை விடப்பட்டிருந்தது. எனினும் உரிய ஆவணங்களை சமர்பிக்குமாறு நீதிமன்று விடுத்த கோரிக்கையினை அடுத்து ஈபிடிபி அமைப்பின் முக்கியஸ்தரான நெப்போலியன் நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

இதையடுத்து ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில்,மோட்டார் சைக்கிளை விடுவிக்க சாவகச்சேரி நீதவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, நெப்போலியன் வருகையினை முன்னிட்டு, நீதிமன்ற வளாகத்தினுள் கனிசமான அளவிலான பொலிஸார் ஆயுதங்களுடன் பாதுகாப்பு நடவடுக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் சுற்றாடலில் பாதுகாப்பு படையினரும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

# ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷனில் இன்று கல்விக் கண்காட்சி!

(யாழ்ப்பாணம்)

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம், கல்விக் கண்காட்சியொன்றை இன்று நடத்தவுள்ளது. காலை 10 மணி தொடக்கம் பி.ப 2.30 மணிவரை இக்கண்காட்சி நிகழ்வு நடைபெறவுள்ளது.

யாழ்.கல்விவலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சுப்பிரமணியம் இக்கண்காட்சியைத் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இதேவேளை, நாளை நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாசாலையிலும் கல்விக் கண்காட்சி நடைபெறவுள்ளது. இந்த் நிகழவில் யாழ்.கல்வி வலய கல்வி முகாமைத்துவப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.இரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இவ்விரு கண்காட்சிகளிலும் பாடசாலை மாணவர்களால் உருவாக்கப்பட்ட பல பயன்மிகு பொருட்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதாக கல்லூரி அதிபர்கள் தெரிவித்தனர்.(ச)

## வவுனியா விபத்தில் வயோதிபர் மரணம்

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதியில் இடம்பெற்ற வீதிவிபத்தில், வயோதிபர் ஒருவர் மரணமடைந்துள்ளார். மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை 10 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் சைக்கிளில் சென்ற ஒருவருடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர் தலையில் பலமாக அடிபட்டதில் மரணமாகியுள்ளார். வவுனியா ஓமந்தையைச் சேர்ந்த சுப்பிரமணியம் தர்மகுலசிங்கம் (வயது 57) என்பவரே மரணமானவராவார்.

சைக்கிளில் பயணம் செய்தவர் படுகாயமடைந்த நிலையில் வவுனிய்யா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ப)

## போக்குவரத்து விழிப்புணர்வு கருத்தரங்கு

போக்குவரத்து விழிப்புணர்ச்சி வாரத்தையொட்டி பாடசாலைகளில் காலை வேளைகளில் விழிப்புணர்ச்சிக் கருத்தரங்குகள் இடம்பெற்றுவருகிறன. பாடசாலை மாணவர்கள் பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்பாக பிரதான வீதிகளில் நின்று, போக்குவரத்தை ஒழுங்குசெய்வதையும் காணக்கூடியதாகவுள்ளது.

பாடசாலைகள் அனைத்திலும் காலைவேளைப் பிரார்த்தனையின்போது அதிபர்கள், ஆசிரியர்களால் மாணவர்களுக்கு போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாக கருத்துரைகளும் வழங்கப்பட்டுவருகின்றன.

கடந்த முதலாம் திகதியிலிருந்து எதிர்வரும் 7 ஆம் திகதிவரை போக்குவரத்து விழிப்புணர்ச்சி வாரமாக கடைப்பிடிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## வரலாற்றுக்கழக அங்கத்தவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுக்கழக அங்கத்தவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில், வரலாற்றுக்கழகத்தினால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் 'காலசுரபி' இதழ் வெளியீட்டிற்கான செயற்பாடுகள் குறித்து ஆராயப்பட இருப்பதனால் சகல அங்கத்தவர்களையும், தவறாது கலந்து கொள்ளுமாறு வரலாற்றுக் கழகத்தின் செயலாளர் சு.தயாபரி கேட்டுக் கொண்டுள்ளார். (ப)

## ஆவணங்கள் அற்ற வாகனங்கள் பதிவு

யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மோட்டார் போக்குவரத்து திணைக்கள நடமாடும் சேவையில், கடந்த 02 ஆம் திகதி செயலகத்திற்கு சமுகமளித்து, வாகனங்களைப் பதிவுககு உட்படுத்த முடியாத நிலையில் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரின் அனுமதியின் கீழ் உரிய அதிகாரிகளிடம் ஒப்பம் பெற்றுச்சென்ற வாகன உரிமையாளர்களை எதிர்வரும் 10 ஆம் திகதிமுதல் 14 ஆம் திகதிவரை வாகனம் இன்றி யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு நேரில் சமுகமளித்து வாகனங்களைப் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாவட்ட உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் வி.பத்மநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மின்தடை

நெடுந்தீவுக்கான மின்சார விநியோகம் கடந்த இரு நாட்களாகத் தடைப்பட்டுள்ளது.

இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. பழுதடைந்த பாகம் தற்போது திருத்தங்கள் மேற்கொள்வதற்காக, யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

மீண்டும் எப்போது மின்சாரம் கிடைக்குமென, பாவனையாளர்கள் எதிர்பார்த்துள்ளனர். நெடுந்தீவு மின்சார விநியோகத்தை இலங்கை மின்சார சபையினரே மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது. (113)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய், பூமிகா நடித்த பத்ரி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
XXX
(சி-1752)

ராஜா யாழ்ப்பாணம்.
பிதாமகன்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1751)

# பிரதமர் ரணில் மீது நம்பிக்கை தெரிவித்து எம்.பிக்களிடம் கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

மூன்று அமைச்சுக்களை தாம் பொறுப்பேற்றுள்ளதாக அறிவித்துள்ள ஜனாதிபதி சந்திரிகா, அரசாங்கத்தை பதவி விலக்கும் முயற்சியில் ஈடுபடலாம் என்பதால், அதனை முறியடிக்கும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது நம்பிக்கை தெரிவித்து எம்.பிக்களிடம் சத்தியக்கடதாசிகளை அரசாங்கத் தரப்பினர் சேகரித்து வருகின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது நம்பிக்கை தெரிவித்து நூற்றுக்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் தனித் தனியாக, சத்தியக் கடதாசிகளில் கையெழுத்திட்டு அரசாங்கத் தரப்பினரிடம் வழங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஒன்றுகூடிய அரசாங்கதரப்பு எம்.பிக்கள் - பிரதமர் மீது நமபிக்கை தெரிவிக்கும் சத்தியக் கடதாசியில் கையொப்பம் இட்டுள்ளனர்.

பிரதமர் மீது நம்பிக்கை தெரிவித்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எம்.பி.க்களும் கையெழுத்திட்டுள்ளனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி, அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ரெலோ அமைப்பின் எம்.பி. எம்.கே.சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. ஆகியோரும் மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பியுமான மனோகணேசன் உட்பட தமிழ் எம்.பிக்கள் சிலரும் கையொப்பங்களை இட்டுள்ளனர்.

ஏனைய கூட்டமைப்பு எம்.பிக்கள் வெளிநாடுகளிலும், தமது தொகுதிகளிலும் தங்கியுள்ளமையினால் அவர்களும் கொழும்பு திரும்பியதும் பிரதமருக்கு ஆதரவான சத்தியக் கடதாசிகளில் கையெழுத்திடவுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தினை கவிழ்க்க முயலலாம் என்பதால், 113 இற்கும் மேற்பட்ட எம்.பிக்களின் பெரும்பான்மை ஆதரவு, அரசாங்கத்திடம் இருக்கின்றது என்பதை காண்பிப்பதற்காகவே அரசாங்கம் எம்.பிக்களிடம் கையெழுத்துக்களை பெற்றுவருகின்றது.

பாதுகாப்பு, உள்துறை, ஊடகத்துறை அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றதையடுத்து ஏற்பட்டுள்ள நிலைமை குறித்தும், அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாகவும் நேற்று நாடாளுமன்றத்தில் கூடிய அமைச்சர்கள் ஆராய்ந்துள்ளனர்.

அமைச்சர் கரு ஜெயசூரியவின் தலைமையில் அரசாங்க அமைச்சர்கள்கூடி சில மணிநேரம் இவ்விடயம் குறித்து ஆராய்ந்துள்ளனர். ஜனாதிபதி தலைமையிலான எதிர்க்கட்சிகளின் திட்டத்தினை முறியடிக்கும் வகையில் ஜனாதிபதிக்கு எதிராகவும், குற்றவியல் பிரேரணையினைக்கொண்டுவருவது குறித்தும், கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. மு.காவுடனும் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை - முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினிடமும் கையொப்பத்தை பெறுவதற்கு பேச்சுவார்த்தைகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றிருந்தன. அரசாங்க முக்கிய அமைச்சர்கள் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.க்களுடன் நேற்றுமுன்தினம் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். இதற்கு மு.கா.ஆதரவு தெரிவித்துள்ளது.

## குடாநாட்டில் அமைதியை உருவாக்க அமைதிப்படை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வன்முறையற்ற நிலையை உருவாக்க அமைதிப் படையொன்று செயற்படவுள்ளது.

சர்வதேச நாடுகளைச் சேர்ந்தவர்கள் இணைந்து அமைத்துள்ள நொன் வயலன் பீஸ் போய் என்ற அமைப்பு யாழ்ப்பாணத்தில் அலுவலகம் ஒன்றைத்திறக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த அமைப்பின் திட்டப் பணிப்பாளர் வில்லியம் றொக்ஸ் இது தொடர்பான நடவடிக்கைகளைக் கவனிக்க யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

சர்வதேச நாடுகளைச் சேர்ந்த 11 உறுப்பினர்களுடன் கொழும்பில் இயங்கும் இந்த அமைப்பு தனது அலுவலகங்களை யாழ்ப்பாணம், வாழைச்சேனை, களுத்துறை ஆகிய இடங்களில் அமைக்கவுள்ளது.

## சைவக்குருமார் பயிற்சிக் கல்லூரி திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

2 ஆவது உலக இந்து மாநாடு ஞாபகார்த்தமாக திருநெல்வேலியில் அமைக்கப்பட்டுள்ள சைவக்குருமார் பயிற்சிக் கல்லூரி கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

# எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கையே; டக்ளஸ் தேவானந்தா கருத்து!

(கொழும்பு)

ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி- முக்கிய மூன்று அமைச்சர்களை பதவியிலிருந்து விலக்கியதுடன், நாடாளுமன்ற அமர்வுகளையும் இரு வாரங்களுக்கு ஒத்திவைத்துள்ளமை எதிர்பார்க்கப்பட்ட ஒரு விடயமே.

இவ்வாறு, ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி, அரசியலில் ஏற்படுத்திவரும் மாற்றங்கள் தொடர்பாக பொறுத்திருந்தே தான் பார்க்கவேண்டுமெனவும் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றதையடுத்து, இராணுவத்தினர் மகிழ்ச்சியடைவர் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியிடம் மேற்படி நடவடிக்கைகள் குறித்து அவரை உடன் சந்திக்கும் திட்டம் எதுவும் தமக்கில்லையெனவும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

# இலங்கை ஜனாதிபதியின் நடவடிக்கைகள் சமாதான முயற்சியை பாதித்துவிடக்கூடாது!

## ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா மூன்று அமைச்சர்களைப் பதவிநீக்கி, இலங்கையில் பதற்ற நிலையொன்றை ஏற்படுத்தியுள்ளார். இவரது இந்த நடவடிக்கையால் சமாதான முயற்சிகள் பாதிக்கப்படக்கூடாது.

இவ்வாறு, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் நேற்றுமுன்தினம் நியூயோர்க் நகரில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மூன்று அமைச்சுக்களை ரத்து செய்து, தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தமை, நாடாளுமன்றச் செயற்பாடுகளை நிறுத்தியுள்ளமை, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையங்களை இராணுவப் பாதுகாப்பிற்குள் கொண்டுவந்துள்ளமை ஆகிய மூன்று முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ள இலங்கை ஜனாதிபதியின் செயற்பாடுகள், தற்போது நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவித்து விடக்கூடாது என்றுதான் விரும்புவதாக அவ்வறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் உயர் பீடங்களில் ஏற்பட்டுவருகின்ற மாற்றங்களையும், செயற்பாடுகளையும், அதனால் விளையக்கூடிய பாதிப்புக்களையும் ஐக்கிய நாடுகள்சபை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும்,

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

# எந்தத் தடைகள், சிரமங்கள் வந்தாலும் சமாதான பேச்சுகள் முன்னெடுக்கப்படும்

## அமெரிக்காவில் பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

தடைகள், தோல்விகள், சிரமங்கள் ஏற்பட்டபோதிலும் சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் தங்கியுள்ள அவர், அங்கு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப் புலிகள் இயக்கம் யுத்தத்திற்குத் தயாராகும் அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை.

அரசாங்கம் இவ்விடயம் தொடர்பாக ஆயுதப்படைகளுடனும், படைத் தலைவர்களுடனும் ஆலோசனை நடத்தியுள்ளது. எனினும், புலிகள் யுத்தத்திற்குத் தயாராக இருப்பது என்ற பிரசாரம் பொய்யானதாகவே உள்ளது.

அரச படைகளும் சகல நடவடிக்கைகளுக்கும் தயாரான நிலையிலேயே இருக்கின்றன.

விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான பிரேரணையானது, இலங்கை வரலாற்றில் முதல்தடவையாக, அந்த இயக்கம் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இந்தப் பேச்சுக்கள் மிகவும் சிரமமானதாகவும், தடைகள் பல, தாண்ட வேண்டியதாகவும்- தோல்விகளைச் சந்திக்கக்கூடியதாகவும் அமையலாம். ஆனாலும், பேச்சுக்கள் நின்று விடப்போவதில்லை.

சர்வதேச சமூகம் சமாதான முயற்சிக்கு முழு ஆதரவைத் தெரிவித்துள்ளது. இது எமக்கு மகிழ்வைத் தருவதாக உள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டியுள்ளது என்றார். (ப)

# இலங்கையின் அரசியல் நெருக்கடி சமாதான முயற்சிகளைப் பாதிக்கும்!

## அமெரிக்கப் பேச்சாளர் தெரிவிப்பு

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலை விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை பாதிக்கும் எனக் கருதுவததால் ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து செயற்பட வேண்டும் என்று அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது.

சமாதான முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து செயற்பட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்துவதாக இராஜாங்க திணைக்கள பேச்சாளர் அடம் ஈரலி தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் சமாதான முயற்சிகளிலும், புலிகளுடனான பேச்சுக்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்று கருதுவதாக தெரிவித்துள்ள அவர், 20 வருடகால இனப் பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு அமெரிக்கா துணையாக இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

# ஜனாதிபதியின் முடிவு துரதிஷ்டவசமானது!

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் இந்தத் திடீர் முடிவு துரதிஷ்டவசமானது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

பி.பி.ஸியின் தமிழோசைக்கு அவர் அளித்த செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்ததாவது -


மூன்று அமைச்சர்களையும் பதவி நீக்குவதென ஜனாதிபதி எடுத்த முடிவு துரதிஷ்டவசமானது.

அவர் இவ்வாறு செயற்படாமல், வேறுஏதேனும் வகையில் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம்.

இனி நடக்கப்போகும் விடயங்களிலேயே நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரையில், எந்தச் சந்தர்ப்பத்திலும் தேர்தலுக்கு முகம் கொடுக்கத் தயாராகவே உள்ளது.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை, ஜனாதிபதியின் நிலைப்பாடு என்ன என அறிய ஆவலாகவுள்ளோம். அரசியலில் பேரம்பேசுதல் என்பது சகஜமான நடவடிக்கை. எனவே, நாம் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் சில விடயங்கள் குறித்து பேசவேண்டியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)



மூன்று அமைச்சர்கள் பதவி நீக்கப்பட்டு நாடாளுமன்றம் இருவாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட பின்னர் கொழும்பு நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமையும், கொழும்பு நகரில் படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையைப் படத்தில் காணலாம்.

# இலங்கையின் பாதுகாப்பு நிலையை சிகப்பு எச்சரிக்கை நிலைக்கு உயர்த்தியுள்ளார் சந்திரிகா!

இலங்கையின் பாதுகாப்பை 'சிகப்பு எச்சரிக்கை' (**Red Alert**) நிலைக்கு உயர்த்தியுள்ள ஜனாதிபதி சந்திரிகா, கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த மையங்கள் அனைத்திற்கும், அதியுயர் இராணுவப் பாதுகாப்பிற்கும் உத்தரவிட்டுள்ளார். தற்போது, தற்காலிகமாகப் பதவிவகிக்கும் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவிற்கு- ஜனாதிபதி விடுத்துள்ள அவசரப் பணிப்புரையின் பேரில், பொலிஸாரின் அனைத்து விடுமுறைகளும் ரத்துசெய்யப்பட்டு, அனைத்து நிரந்தர, இடைக்கால மற்றும் அவசர சேவைக்கான பொலிஸாரும் உடனடியாக சேவைக்குத் திரும்பப் பணிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள்புரட்சி வெடிக்கலாம் என்ற அச்சம் காரணமாக, கலகத்தை அடக்கும் விசேட இராணுவப் பிரிவை - ஜனாதிபதி உஷார் நிலையில் வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பதற்றநிலை தொடரும் பட்சத்தில், தலைநகரிலும் மற்றும் முக்கிய புறநகர்ப் பகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட வாய்ப்பிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தின் முன்பான

# வீதி வேகத்தடைகளை இரவோடிரவாக அகற்றிய இராணுவத்தினரும் பொலிஸாரும்

வேகமாகச் செல்லும் வாகனங்களை கட்டுப்படுத்தவென - கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம் முன்பாக அமைக்கப்பட்டிருந்த வேகத் தடைகளை, இரவோடிரவாக படையினரும், பொலிஸாரும் அகற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை, அனுஷ்டிக்கப்படவுள்ள "தமிழீழ மாவீரர் தினத்தை" முன்னிட்டு, கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லப் பகுதியில் துரிதமாக புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுவருகின்றது.

1996 ஆம் ஆண்டு யாழ் குடாநாடு படையினரால் கைப்பற்றப் பட்ட வேளை, கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லமும், இராணுவத்தால், முற்றாகஇடித்து நிர்மூலமாக்கப்பட்டிருந்தது.

எனினும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் ஏற்பட்டுள்ள சுமூக நிலையை அடுத்து இந்த மாவீரர் துயிலுமில்லம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களுடன், பொதுமக்களின் வாகனங்களும் புனரமைப்புப்பணியில் ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில், மாவீரர் துயிலுமில்லம் முன்பாகவுள்ள கொடிகாமம்- பருத்தித்துறை வீதியூடாக பயணிக்கின்ற வாகனங்கள் விபத்துக்குள்ளாவதையடுத்தே, இந்த வீதியில் தற்காலிக வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு அந்தப் பகுதியில் குவிக்கப்பட்ட பெருமளவான படையினரும், பொலிஸாரும் இணைந்து எந்தவித முன்னறிவித்தலும் இன்றி இந்த வேகத்தடைகளை அகற்றியுள்ளதாக, விடுதலைப்புலிகளின் தென்மராட்சி பிரிவு அரசியற் துறையினர் தெரிவித்தனர். (202)



கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலைய முன்பள்ளிக்காக திரு.திருமதி செல்லையா சின்னத்தங்கம் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்ட சிறுவர்களுக்கான ஊஞ்சலில், மாணவர்கள் ஆடுவதைப் படத்தில் காணலாம். (83)

## விபத்தில் பாதுகாப்பு ஊழியர் காயம்

(யாழ்ப்பாணம்)

சீமெந்துக் கூட்டுத்தாபன பாதுகாப்பு ஊழியர் ஒருவர், விபத்தொன்றில் படுகாயமடைந்தார். கன்னாதிட்டி பகுதியில் சீமெந்துக் கூட்டுத்தாபனம் அமைந்துள்ள பகுதிக்கு அருகில் - நேற்று முன்தினம் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ்.செல்வம் (வயது 46) என்பவரே படுகாயமடைந்தவராவார். தலையில் படுகாயமுற்று சுயநினைவிழந்த நிலையில் இவர் யாழ்.போதனா வைத்தியாசலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (ச)

## சமுர்த்திச் சங்கப் பயனாளிகளின் சுயதொழிலுக்கு வட்டியில்லாக் கடன்

வலி. தெற்குபிரதேச செயலகத்துக்குட்பட்ட சமுர்த்திச் சங்க பயனாளிகளுக்கு, சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக, கடைக்குரிய தளபாடங்கள் வட்டியில்லாக் கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள பயனாளிகளில் - கடை நடாத்துவோர் நால்வருக்கு 12 ஆயிரம் ரூபா பெறுமதியான கடைக்குரிய தளபாடங்கள் வழங்கப்படவுள்ளன என்றும், பயனாளி மாதம் ஒன்றுக்கு 120 ரூபாவீதம் தொடர்ச்சியாக கட்டிமுடிக்க வேண்டும். இப்பணத்திற்கு வட்டி அறவிடப்படமாட்டாது என்றும் கூறப்படுகிறது.

தென்னிலங்கையில் சமுர்த்திச் சங்கங்களால், பல்வேறு சுயதொழில் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன. ஆனால், இங்கு அண்மைக்காலமாகவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(83)

## அரச அலுவலர்கள் பலருக்கு அடுத்த வருடம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

அடுத்த வருட முற்பகுதியில், அரசஅலுவலர்கள் பலருக்கு இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மாவட்டச் செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள் என்பவற்றில் கடமையாற்றும் ஊழியர்களுக்கே, இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்த வருட ஆரம்பத்தில் நிர்வாக சேவையில் கடமையாற்றும் பல மூத்த அரச அதிகாரிகள் ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளனர். இவர்களின் இடங்களுக்கு, சேவை மூப்பின் அடிப்படையிலும், திறமைஅடிப்படையிலும் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

தற்போது, நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்துள்ள, பயிற்சிகளை மேற்கொண்டுவருபவர்களும் இந்தப் பதவிகளில் நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதிக ஆண்டுகள் ஒரு அலுவலர் குறித்த அலுவலகம் ஒன்றில் கடமை புரிவதால், நிர்வாகச் சிக்கல்கள் பல ஏற்படுவதாகவும், அவற்றைத் தவிர்ப்பதற்காகவே இந்த இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளன. மாவட்டங்களில் இருந்தும் இடமாற்றங்கள் நடைபெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## பாடசாலை மாணவனைக் காணவில்லையென்று மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவன் ஒருவனை, கடந்த மாதம் 1 ஆம் திகதியில் இருந்து காணவில்லையென அவரது தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இளவாலை புனித ஹென்றியரசர கல்லூரி மாணவனான, கரவெட்டி மத்தியைச் சேர்ந்த கனகரட்ணம் திருமாறன் (வயது-15) என்பவரே காணாமல் போனவராவார். பாடசாலை விடுதியில் தங்கியிருந்து கல்வி பயிலும் இவர் பாடசாலை உதைப்பந்தாட்ட அணியிலும் அங்கம் வகிப்பதாகக் கூறப்படுகிறது.

பாடசாலை பங்கு கொண்ட உதைப்பந்தாட்டப் போட்டி ஒன்றில் அணி தோல்வியைத் தழுவியமைக்காக, அணிவீரர்கள் பொறுப்பாசிரியர் தண்டித்ததாக கூறப்படுகிறது. இந்தச் சம்பவம் நடைபெற்ற மறுநாளே, தனது நண்பர்கள் இருவருடன் இவர் விடுதியைவிட்டு வெளியேறியுள்ளார்.

பஸ்மூலமாக யாழ்நகரை வந்தடைந்த இவர்களுள், இவரது நண்பர்கள் இருவரும் பருத்தித்துறை, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் உள்ள தமது வீடுகளுக்குச் சென்றுள்ளனர். யாழ் பஸ்நிலையத்தில் தனித்து விடப்பட்ட இவர் பின்னர் என்னவானார் எனத் தகவல் இல்லை. ஏனைய இவருவரும் ஒரு வாரத்திற்கு பின்னர் விடுதிக்குத் திரும்பியுள்ளனர். அதன் பின்னரே மாணவன் காணாமல் போனமை தொடர்பாக, அவரது நண்பரொருவர் பெற்றோருக்கு தெரிவித்துள்ளார்.

மாணவன் காணாமல் போன செய்தியை அறிந்த பெற்றோர் பல இடங்களுக்கும் சென்று அவரைத் தேடியுள்ளனர். விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகங்களுக்கும் சென்று விசாரித்துள்ளனர். தமது அமைப்பில் குறித்த மாணவன் இணையவில்லை என அவர்கள் தெரிவித்ததை அடுத்து, இது தொடர்பாக பெற்றோர் யுனிசெப், மனித உரிமைகள் ஆணைக்குழு, போர்நிறுத்த கண்காணிப்புக்குழு ஆகியோரிடம் முறையிட்டுள்ளனர்.

அதேவேளை, குறித்த மாணவனின் வீட்டுக்குச்சென்ற சிலர் அங்கு மாணவனின் பெற்றோர் இல்லாமையால், உறவினர்களிடம் மாணவனின் புகைப்படம் பெறமுடியுமா என விசாரித்ததாகவும் கூறப்படுகிறது.

தமது மகனுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக அறிய முடியாமல், பெற்றோர் மிகுந்த கவலை அடைந்துள்ளனர். (ச)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தீவிரம்

(வண்ணை)

யாழ்.நகரில் வேகமாகப் பரவும் டெங்கு நோயைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு, தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதற்காக, நேற்று முன்தினம் முதல் பல இடங்களிலும் டெங்கு நோய்காவியை அழிக்கும் மருந்து விசிறப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

நேற்று முன்தினம் கொக்குவில், நந்தாவில் பகுதிகளில் மாநகரசபை அதிகாரிகளால் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட 12 பேர் யாழ்ப்பாணத்தில் இனங்காணப்பட்டுள்ளனர். நுளம்பு மூலமாகப் பரவும் இந்த டெங்கு நோய் ஒரு உயிர் கொல்லி நோய் என்பது குறிப்பிடத்தக்கது. (111)

## காயத்திரி பீடாதிபதியால் யோகாசனப் பயிற்சி

ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதிபதி - ஸ்ரீராஜ்குமார் அடுத்த வாரம் முதல் காயகல்ப, அகத்தாய், குண்டனி கோகம், முதலான பயிற்சிகளை அளிக்கவுள்ளார்.

இலவசமாக அளிக்கப்படவுள்ள இப்பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புவோர் - இல. 86, பலாலிவீதி, திருநெல்வேலி, என்னும் முகவரியுடனோ, அல்லது 222 7267 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ, தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ப)

## மட்டுவில் ஆலய நன்னீர் கிணற்றுக்கு கைப்பம்பி பொருத்தப்பட்டுள்ளது

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு முத்துமாரியம்மன் ஆலயத்தில் உள்ள, நன்னீர்க் கிணற்றுக்கு இந்தப் பகுதி இளைஞர்கள் ஒன்றிணைந்து கைப்பம்பி ஒன்றை பொருத்தியுள்ளனர்.

ஆலயத்தின் உள் வீதியில் அமைந்துள்ள மேற்படி கிணற்று நீரையே, இந்தப்பகுதி மக்கள் தமது குடிநீர்த்தேவைக்காக பெற்றுவந்தனர். ஆலயத்தின் உள்ளே அமைந்திருந்தபடியால், ஆலயத்திற்குள் செல்ல முடியாதவர்கள் குடிநீர் பெறுவதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியிருந்தனர்.

தற்போது இந்தக் கிணற்றிலிருந்து வெளிவீதிக்கு கைப்பம்பி பொருத்தப்பட்டிருப்பதால், சகலரும் சிரமமின்றி குடிநீரைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவுள்ளது. பொது நோக்குடன் இந்தப்பகுதி இளைஞர் குழாம் மேற்கொண்ட இந்த முயற்சியைப் பொதுமக்கள் பாராட்டியுள்ளனர். (24)

### கிருஷாந்தி கொலைவழக்கு எதிரிகளின்

## தண்டனையை இரத்துச் செய்யுமாறு உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை

மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரும், மாறுபட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இணக்கப்பாட்டு அடிப்படையில், மரண தண்டனை விதித்த கிருஷாந்தி குமாரசுவாமி கொலைவழக்கின் எதிரிகளுக்கான தண்டனையை இரத்து செய்யுமாறு, உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிருஷாந்தி குமாரசுவாமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி கொலைசெய்த சம்பவம் தொடர்பான வழக்கில், குற்றவாளிகளான இராணுவவீரர் ஐந்து பேருக்கும், மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரடங்கியகுழு, மரணதண்டனை விதித்தது. இந்த மரணதண்டனையை இரத்து செய்யுமாறு கோரி, பிரதிவாதிகள் சார்பில் மேன் முறையீடு செய்யப்பட்ட மனுவை ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள்குழு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

இதன் போது பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி - மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரும் மாறுபட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, பிரதிவாதிகளுக்கு தண்டனை வழங்கியதால், அவர்களுக்கான தண்டனையை இரத்து செய்யுமாறு நீதியரசர்களிடம் கோரினார். இந்தமனு தொடர்பான மேலதிக விசாரணைகளை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு தென்னிலங்கை அதிகாரிகள்குழு வருகை

(சுதுமலை)

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கு - தென்னிலங்கையைச் சேர்ந்த 30 பேர் கொண்ட உயர்மட்ட அதிகாரிகள்குழு ஒன்று நாளை மறுநாள் வருகைதரவுள்ளது.

மேற்படி குழுவினரைப் பிரதேச சபை செயலாளர் எஸ்.விக்டர், உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஸ் ஆகியோர் வரவேற்பார். யாழ். பிராந்திய உள்ளூராட்சி துணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி தலைமையில், அதிகாரிகள்குழு அழைத்துவரப்பட்டு, மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்டபத்தில் வரவேற்பு உபசாரமும், மதியபோசனமும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் வரும் குழுவினர் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் ஆகிய பிரதேசங்களிற்கும் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த அதிகாரிகள் 4 தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கிநின்று, இந்தப் பிரதேச செயற்பாடுகளையும் வேறு சில ஆலோசனைகளையும் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

## பாதுகாப்பு அரண்களை பலப்படுத்தும் படையினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் 512 ஆவது பிரிகேட் தலைமையகத்தின்- முன்னரங்க நிலைகளைப் படையினர் பலப்படுத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் காலை முதல், பாதுகாப்பு அரண்களைப் பலப்படுத்தும் முயற்சியிலே படையினர் ஈடுபட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

விடுதலைப் புலிகளால் இடைக்கால திட்டவரைபு சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்நிலையில், படையினர் பாதுகாப்பு அரண்களைப் பலப்படுத்தி வருவதையிட்டு, மக்கள் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர்.

ஸ்ரான்லி வீதி, வெலிங்டன் சந்திக்கு அருகில் அமைந்துள்ள, முன்னரங்க நிலைகளையே படையினர் பலப்படுத்தி வருகின்றனர். அதேவேளை, இருவாரங்களுக்கு முன்னர் இந்தப் படைத்தளத்திற்குப் புதிய டாங்கியொன்று கொண்டுவரப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

படை உயரதிகாரிகளின் நேரடிக் கண்காணிப்பில், சுமார் இருபதிற்கும் மேற்பட்ட படையினர் - முன்னர் அமைக்கப்பட்டிருந்த காவலரண்களை அகற்றி, புதிதாகக் காவலரண்களை அமைக்கும் பணியில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டிருந்தனர்.

1996 ஆம் ஆண்டு யாழ். குடாநாடு - படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னர், யாழ். நகரின் மையப் பகுதியான விக்டோரியா வீதி, மணிக்கூட்டுக்கோபுர வீதி மற்றும் மின்சார நிலையவீதி ஆகிய வீதிகளை உள்ளடக்கிய பாரிய படைத்தளமொன்றைப் படையினர் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(202)

# அதிக வருவாய்தரும் புகையிலையை சாம்பல் நோயிலிருந்து பாதுகாத்தல்

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

யாழ். மாவட்டத்தில் கூடுதலாகப் பயிரிடப்படும் பணப் பயிரில் - புகையிலை முதலிடம் வகிக்கின்றது. புகையி லையைப் பயிர்செய்து, அதனைப் பதப்படுத்தி எடுப்பது முதல், மிகவும் நுணுக்கமான முறைகளைக் கையாளுதல் வேண்டும். அந்தவகையில், புகையிலைப் பயிர்களை ஐப்பசி - மார்கழி மாதங்களில் தாக்கும் ஒரு நோயாகச் சாம்பல் நோய் காணப்படுகிறது. இந்த நோய் - புகையிலை செய் யப்படும் எல்லா இடங்களிலும் காணப்படும். புகையிலையின் முக்கியமான பகுதியே இலைகள்தான். அந்த இலைகளை நோய் தாக்குமாயின், புகையிலையால் பெறப்படும் அனைத்து நன்மைகளும் இல்லாமலேயே போய்விடும்.

இந்தச் சாம்பல் நோயினால், இலைகள் முற்று முழு தாகப் பாதிப்பிற்கு உள்ளாகின்றன. இந்தச் சாம்பல் நோய் ஏற்பட்ட செடிகளின் இலைகளின் மேற்பாகத்தில், சாம்பல் பொடி தூவியது போன்ற புள்ளிகள் ஆங்காங்கு காணப்படும். நாளடைவில் இந்தப் புள்ளிகள் பெரியவையாகி, இலைகளின் இருபுறங்களிலும் பரவும். இந்த நோயானது சாதாரணமாக நிலமட்டத்திலிருந்து அடுத்தடுத்தாற்போலுள்ள இலைகளில் அதிகமாகப் படர்ந்திருக்கும். நோயானது செடிகளைக் கடுமை யாகத் தாக்கியிருந்தால், செடிகளின் தண்டின்மேலும் இந்த வெண்ணிறமான புள்ளிகள் காணப்படும். இந்த நோய் தாக்கிய இலைகள் - நாளடைவில் மெலிந்து, சருகுபோல் ஆகிவிடும். அவ்வாறு காய்ந்த இலைகளைப் பக்குவப்படுத்தும்போது, கெட்டு விடும் இதனால், புகையிலையின் தரமும், விலைமதிப்பும் குறைந்து விடும்.

### கட்டுப்படுத்தும் முறைகள்

இந்த நோயினை - நுண்ணிய கந்தகப் பொடியைக் கொண் டும், ஏனைய சிபார்சுசெய்யப்பட்ட கிருமிநாசினிகளைப் பாவிப் பதன் மூலமும் கட்டுப்படுத்தலாம். கந்தகப் பொடியினைக் கொண்டு கட்டுப்படுத்துவதாயின் - நுண்ணிய கந்தகப் பொடியை இலைகளின்மேல் தூவாமல் செடிகளின் அடிப்பா கத்திற்குத் தூவுதல்வேண்டும். தரையில் கந்தகப்பொடி யினைத் தூவுவதற்கு முன்பு, செடியின் அடிப்பாகத்திலி ருக்கும் முதிர்ந்த இலைகளைப் பிடுங்கி அகற்றிவிட வேண்டும்.

அவ்வாறு செய்தால்தான் - தரையினில் தூவப்படுகின்ற கந்தகப்பொடியின் ஆவி - செடியின் மேற்பாகங்களிற்குப் பரவ ஏதுவாயிருக்கும். அத்தோடு, செடிக்குச்செடி இடை வெளியினைச் சற்று அதிகமாக விடுவதனால், இந்த நோயினை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தமுடியும்.

எனவே, இந்த நோய் அதிகமாகக் காணப்படும் இந்த ஐப்பசி முதல் மார்கழி மாதம்வரை, மிகவும் அவதானமாக இருந்து, நோயினை இனங்கண்டதும், உடனடியாகத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, புகையிலையின் தரத்தினை மேம்படுத்தி, நல்லவருவாயினை அடையுங்கள்.

இரா.காயத்திரி

## விவசாயப் பெருமக்களே!

**தமிழர் தாயகம் செழிக்கப் பாடுபடும் வேளாண் மக்கள் நீங்கள்.**


விவசாயம் தொடர்பாக உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள், பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு. உங்கள் கேள்விகளைக் குறிப்பிட்டு

**உழவர் உலகம்**
**'நமது ஈழநாடு'**
**267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரியுடன் நேரிலோ, தபால் மூலமோ உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் கேள்விகளை உரிய துறைசார்ந்தவர்களிடம் சமர்ப்பித்து, உரிய ஆலோசனை பெற்று 'உழைப்போம் உயர்வோம்'- தொழில் மலர் மூலம் உங்களுக்கு வழங்கவுள்ளோம்.

## நெல் வயல்களில் விவசாயிகளுக்கு உதவும் பூச்சிகள்




**விவசாயிகளே!**

**உங்கள் வயலில் காணப்படும் எல்லாப் பூச்சி களும் பயிருக்குத் தீங்கு செய்வதில்லை. உங் கள் நண்பர்கள் போன்ற பூச்சிகளும் வயலில் இருக்கின்றன. அந்தப் பூச்சிகள் உங்களைப் போல, உங்கள் பயிர்களைப் பாதுகாக்கும்.**

## தொழில் வங்கி



| நிறுவனம் | ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் - கிளிநொச்சி (WFP) | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் (UNDP) - கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு |
|---|---|---|
| வெற்றிடமாக உள்ள பதவிகள் | 01. திட்ட உதவியாளர்.<br>02. உணவு மேற்பார்வையாளர். (Food Monitor).<br>03. நிர்வாக உதவி உத்தியோகத்தர்.<br>04. வாகன ஓட்டுநர். | 01. சமூக கட்டமைப்பு பொறியியலாளர்.<br>02. விவசாய நிபுணர்.<br>03. மீன்பிடியியல் நிபுணர்.<br>04. வெளிக்கள உத்தியோகத்தர்.<br>05. வாகன ஓட்டுநர். |
| அடிப்படைத் தகுதி | 01. க.பொ.த. (உ/த) சித்தி.<br>- க.பொ.த. (சா/த) ஆங்கில சித்தி.<br>- பொது நிர்வாகம், சமூக அபிவிருத்தி அல்லது அவை சார்ந்த ஏதாவதொரு துறையில் பல்க லைக்கழகத்தால் வழங்கப்பட்ட பயிற்சி.<br>- word Processing, Spreadsheet database application<br>- 6 வருட அனுபவம்<br>02. க.பொ.த. (உ/த) சித்தி.<br>- word Processing, Spreadsheet database application<br>- 4 வருட அனுபவம்.<br>03. - க.பொ.த. (உ/த) சித்தி.<br>- க.பொ.த. (சா/த) ஆங்கில சித்தி.<br>- word Processing, Spreadsheet database application<br>- 4 வருட அனுபவம்<br>04. வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் 4 வருட அனுபவம். | 01. குடிசார் பொறியியல் அல்லது அவை சார்ந்த துறையில் பட்டதாரி.<br>- 5 வருட அனுபவம்<br>- ms office<br>02. விவசாயம் அல்லது அவை சார்ந்த துறையில் பட்டதாரி.<br>- 3 - 5 வருட அனுபவம்<br>- ms office<br>03. மீன்பிடியியல் அல்லது அவை சார்ந்த துறையில் பட்டதாரி.<br>- 3 - 5 வருட அனுபவம்<br>04. சமூக, அரசியல், பொருளியல் விஞ்ஞானங்கள் அல்லது அவை சார்ந்த துறையில் பட்டதாரி.<br>- 3 - 5 வருட அனுபவம்<br>- ms office<br>05. வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் 5 வருட அனுபவம். |
| விண்ணப்ப முடிவு திகதி | 21.11.2003 | 07.11.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

## தேங்காய் உற்பத்தியை அதிகரித்துப் பயனடையுங்கள்

உரமானியத் திட்டத்தில் இணைந்து, தென்னை மரங் களுக்கு உரமிட்டு - தேய்காய் உற்பத்தியை அதிகரிக் குமாறு, தென்னைச் செய்கையாளர்களுக்கு - தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆலோசனை வழங்கி யுள்ளார்.

யாழ். குடாநாட்டில் மழைபெய்ய ஆரம்பித்தவுடன், முதிர்தென்னை மரங்களுக்கு 'முதிர் மரக்கலவை' உரத் தினை (APM) இடுவதன்மூலம், தேய்காய் உற்பத்தி யினை அதிகரிக்கமுடியும்.

குடாநாட்டிலுள்ள ஏதாவதொரு கமநலசேவை நிலை யத்தில் தென்னை முதிர் மரக்கலவை உரத்தினைக் கொள்வனவு செய்து, அதன் பற்றுச்சீட்டினை - தென்னை அபிவிருத்தி அலுவலர், யாழ்ப்பாணம் என்ற இடத்தில் சமர்ப்பித்து, உரமானிய விண்ணப்பப்படிவத்தினை - தென் னைச் செய்கையாளர்கள் பெற்றுப் பயனடையலாம்.

பாளை விரிந்து காய்க்கும் தென்னைமரங்களுக்கு, மூன்று கிலோகிராம் **APM** உரத்தினை, தென்னைமர அடியி லிருந்து ஆறு அடி சுற்றுவட்டப் பரப்பளவு முழுவதும் மண்ணைக் கொத்திப் புரட்டியபின்பு தூவி, மண்ணுடன் கலந்துவிடவும். இவ்வாறு செய்வதன்மூலம், தென்னையி லிருந்து அதிகளவு தேங்காய்களை மாதாமாதம் பெற் றுக்கொள்ளமுடியும்.

உரமானியத்தினையும், மண் ஈரப்பாதுகாப்பு மானி யத்தினையும் பெறவிரும்பும் தென்னைச் செய்கையாளர் கள் - உடனடியாகக் காலம்தாழ்த்தாமல், ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் அலுவலக நேரத்தில் கமநலசேவை நிலையக்கட்டடம், நல்லூர் என்னும் முகவரியில் தொடர்பு கொண்டு, மானியத்திட்டத்தில் இணைந்து பயன்பெறலாம்.

# தகவல் தொழில்நுட்ப யுகத்தில்

# கணினியைக் கலங்கடிக்கும்

# "வைரஸ்"

இன்றைய உலகம் தகவல் தொழிநுட்ப உலகம் (IT world) என்று அழைக்கப்படுகின்றது. இவ்வாறு அழைக்கப்படும் தகவல் தொழிநுட்ப உலகமானது, தகவல் பரிமாற்றத்தால் ஏற்பட்ட தொழிநுட்ப புரட்சிகரமாக, கைத்தொழிலில் பாரிய வளர்ச்சியை ஏற்படுத்தி, இந்த யுகத்தினையே தகவல் தொழில்நுட்ப யுகமாக மாற்றிவிட்டது.

இவ்வாறு மாற்றம் பெற்ற இந்தத் தகவல் தொழிநுட்ப யுகமானது, பல்துறை வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்த போது, இன்று இதன் எதிர்விளைவே தகவல் தொழில்நுட்ப பின்னடைவிற்கும் காரணமாக அமைந்துள்ளது. இதற்கு உதாரணமாக - அமெரிக்காவில் நடந்த 'செப்ரெம்பர்' தாக்குதலைக் குறிப்பிடலாம்.

இதேபோன்றே, தகவல் தொழில்நுட்பத்தில் முன்னணி வகிக்கும் துறைகளில் ஒன்றான கணினித் துறையும் 'Virus' எனும் வார்த்தையால் கலங்கடிக்கப்படுகிறது. 'computer virus' என்பது தொற்றுநோய்க் கிருமிகளோ அல்லது நுண்ணுயிர்களோ அல்ல. அவ்வாறாயின், என்ன என நீங்கள் கருதக்கூடும். இவை மனிதனால் நாசவேலை கருதி எழுதப்படும் கணனி செய்நிரல் (Computer Programme) ஆகும். Virus என்பதன் விரிவாக்கம் "Very important Resources under siege" என்பதாகும். அதாவது, இதன் பொருள் 'மிக முக்கியமான பகுதிகளை முற்றுகையிடல்' என்பதாகும்.



இத்தகைய Virus தோன்ற அடிப்படை காரணமாக அமைந்தது "டேவிட் ஜெரால்ட்" என்ற எழுத்தாளரது கதையாகும்.

இவர் எழுதிய கதையொன்றில், அவரது வில்லன் பாத்திரம் ஒன்று கணினி பொறியியலாளர் ஆகும். இந்த பொறியியலாளர் தனது கணினியிலிருந்து கொண்டு, ஏனைய கணினிகளுக்கு Virus அனுப்புதல், பின் நேரில் சென்று AntyVirus Programme களை விற்றலாகும்.

இந்தக் கதை ஆசிரியர்களின் இத்தகைய பாத்திரம் முழுமையான கற்பனை ஆகும். அப்பொழுது இவருக்கு Virus என்பதற்கு உண்மையான உருவாக்கம் பற்றி எதுவும் அறிந்திருக்கவில்லை. இந்தக் கதையை இவர் 1972 இல் எழுதியிருந்தார். ஆனால், இந்தக் கதைக் கருவே பிற்காலத்தில் Virus உருவாக்கத்திற்கு முன்னோடி எனக் கருதப்படுகிறது.

இதன்பின், 13 ஆண்டுகளுக்குப் பின் 1983 இல் கலிபோர்னிய பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் - தனது கலாநிதி பட்ட ஆய்வுக்காக Computer Virus ஐ உருவாக்கியிருந்தார். இந்த நிகழ்வு ஆய்வுக்காகச் செய்யப்பட்டதால், அவை வெளியுலகில் எந்தப் பாதிப்பையும் உருவாக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து Software களைத் தயாரித்து வெளியிடும் நிறுவனங்கள் - தங்களது மென்பொருட்களை அனுமதியில்லாது பிரதி எடுக்கமுடியாதபடி, அதனுடன்கூட ஒரு Virus Programme ஒன்றையும் இணைத்து எழுதிவந்தார்.

இதன் காரணமாக, ஒருவர் அந்த நிறுவன அனுமதியில்லாது மென்பொருட்களைப் பிரதி எடுக்கும்போது, அவை Virus ஐயும்கூட பிரதியெடுத்து, அதனை பரப்பும் செய்நிரலாக மாற்றம் கண்டன. இப்படியான செயல் முறைகளே Virus தோன்றக் காரணமாக அமைந்தன. இதற்குச் சிறந்த உதாரணமாக முதன் முதலில் கணினி உலகில் பரபரப்பை ஏற்படுத்திய Brain Virus குறிப்பிடலாம்.

1985 இல் பாகிஸ்தான் தலைநகர் லாகூரில் - இரு சகோதரர்கள் "Brain Computer Services Shop" என்ற நிறுவனத்தை நடத்திவந்தனர். இவர்கள் சில மென்பொருள் பொதிகளைப் பிரதி செய்து, மிகக்குறைந்த விலைக்கு விற்று வந்தனர். இவர்கள் இதனுடன்கூட ஒரு Virus செய்நிரலையும் எழுதி, அதற்கு Brain என்று பெயரையும் இட்டிருந்தனர். இந்த நடைமுறையே கணினி உலகின் முதலாவது Virus ஆகக் கருதப்படுகிறது.

இத்தகைய செயன்முறையானது காலப் போக்கில் திட்டமிட்டு நாசவேலைகளைச் செய்ய முன்னோடியாக அமைந்தது. இது இன்றைய உலகில் கணினியின் தகவல் பாதுகாப்பிற்கு ஒருபெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. 'உலகெங்கும் Net Work உடன் தொடுக்கப்பட்டிருக்கும். கணினிகளில், பெருந்தொகையான இரகசியத் தகவல்கள் - இப்படியான தகவல்களைப் பாதுகாப்பதற்காக, கணினி வலைப்பின்னலில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும்.

ஆனால், கணினி உலகில் இருக்கும் பல சிறந்த கணினி நிபுணர்கள் - இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளை உடைத்து, பல இரகசியத் தகவல்களை எடுத்துள்ளனர். இவ்வாறு எடுப்பவர்கள் - இணையத் திருடர்களாகக் கருதப்படுகின்றனர். இவ்வாறு திருட்டுப் புரிபவர்கள் Hacker என அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் இவ்வாறு திருடுவது மட்டுமன்றி, Virus ஐயும் பரப்பிவிடுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்டவையாகும்.

இதனால், இவர்களுக்கு அரசு சட்டத்தின் கீழ் கடுமையான தண்டனைகள் வழங்கப்படுகின்றன. ஆனால், தீங்கிழைக்கும் எண்ணத்துடன் எழுதப்பட்ட பல செய்நிரல்கள் கூட, Virus ஆக மாறிவிடுவதுமுண்டு.

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த Computer துறை மாணவன் ஒருவன் - தனது நண்பர்களுக்கு e-mail மூலம் அனுப்பிய நத்தார் வாழ்த்துக்கள் - தவறுதலாக IBM Net work இல் பரவி, விரைவாக IBM Net work ஐச் செயலிழக்க செய்துவிட்டது.

இவ்வாறு எதிர்பாராத விளைவுகளும் ஏற்படுவதுண்டு. எனவே, நாம் கணினி செய்நிரலைக் கையாண்டு, தகவல்களைப் பிறருக்கு அனுப்பும்போது, மிகவும் அவதானத்துடனும், விழிப்பாகவும் செயற்படுதல் முக்கியமானது.

இலங்கையில் முஸ்லிம் கிராமமான மாவனல்ல கலகத்தைத் தொடர்ந்து, மாவனல்ல Virus ஒன்று உதயமாகி, உலகில் பல கணினிகளைச் செயலிழக்கச் செய்தது.

மாவனல்லையில் மூண்டெழுந்த அசம்பாவிதங்களைத் தொடர்ந்து உருவாகிய இந்த Virus, ஒரு "அரசியல் Virus" எனக் கருதப்படுகின்றது. இவ்வாறு அரசியல், பொருளியல், இராணுவரீதியான காரணங்களுக்காகவும் virus பரப்பப்படுகின்றன.

1999 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், கணினி உலகமே கதிகலங்கிப்போனது. அதற்குக் காரணம் - அமெரிக்காவைச் சேர்ந்த David L. smith என்பவரால் உருவாக்கப்பட்ட melissa என்ற Virus ஆகும். இதற்கு "கவர்ச்சி virus" என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இது e-mail ஊடாகவே பரப்பப்பட்டது.

இதன் வழித்தோன்றலாக ஏற்பட்டதே "PAPA" என்ற virus ஆகும். U.S.A அரசின் பென்டகன் தலைமைச் செயலகத்தில் இயங்கும் "Computer Emergency Response Team" விடுத்த நாடு தழுவிய அவசரகால செய்தியில் - அவர்களின் கணிப்பின்படி, இந்த virus ஆனது (melissa) ஒரு கணினியிலிருந்து 50 கணினிகளுக்குத் தாவி, பின் அவை ஒவ்வொன்றிலுமிருந்து 50 கணினிகளுக்குத் தாவிச்செல்லும் வல்லமை கொண்டவை. இவ்வாறு நோக்கின் - இதன் 5 ஆவது நிலையில் 31 கோடியே 25 இலட்சம் கணினிகள் virus தொற்றுக்கு உள்ளாகும்.

இதன் பின்னர்தான், U.S.A. அரசு - சர்வதேச அளவில் ஒரு சட்ட வரம்பைக் கொண்டுவந்தது. இதன் பிரகாரம்- Virus ஐ உருவாக்கி, பரப்புவதற்கு அதிகபட்ச சிறைத் தண்டனையும், அவர்களால் பாதிக்கப்பட்ட அனைத்துக் கணினிகளுக்குமான நட்டஈட்டினையும் - Virus ஐ உருவாக்கியவர்களே வழங்கவேண்டும் என்பதாகும்.

virus Programme ஆனது - பொரும்பாலும் தரவுகளை அழித்துவிடவும் எழுதப்படுகின்றது.

இப்படிப்பட்ட ஒரு Virus ஆனது, எப்படிக் கணினிக்குள் வந்து சேருகின்றது என்பதைப் பார்ப்போம். ஒரு கணினியிலிருந்து நீங்கள் தரவுகளை Copy செய்கிறீர்கள் என்று வைத்துக்கொண்டால், நீங்கள் பிரதி செய்துகொண்டிருக்கும்போதே, அந்த தரவுகளுடன் இணைந்து அழையாத விருந்தாளியாகப் புகுந்துவிடும்.

இவ்வாறு நுழைவது, பிரதிசெய்பவருக்குத் தெரியாது. ஏனெனில், பெரும்பாலான Virus தாம் உட்புகுந்த செய்தியினை எள்ளளவும் வெளிக்காட்டாது.

தாம் பிரதி செய்த தகவல்களில், இந்த Virus சேர்ந்து கொண்டதை அறியாத கணினிப் பாவனையாளர்கள் - தாம் பிரதி செய்த Disk ஐ வேறொரு கணினியில் பயன்படுத்துவர். இந்த நேரத்தில் Virus இல்லாத மற்றைய கணினிக்கும் Virus தொற்று ஏற்பட்டுவிடுகின்றது. இதனையே Virus தொற்று என்பர்.

Virus பரப்பும் ஒருவர் - தனது Programme ஐ மிக வேகமாகப் பரப்ப முயல்வர். இதற்காக இவர்கள் கையாள்வது Internet ஐ ஆகும்.

இதன்மூலம், வேகமாக Virus ஐ பரப்பிவிடமுடியும். ஏனெனில், இணையப் பக்கங்களில் உலா வருவருபவர்களே இப்போது மிக அதிகமாகவுள்ளனர். மேலும். e-mail ஊடாகவும் இவர்கள் virus ஐ அனுப்புகின்றனர்.

இதுவரையிலும் நாம் பார்த்த Virus - மென்பொருளை (Software) மட்டுமே தாக்கியழித்தன. Virus என்றால் அவை மென்பொருட்களுடன் மட்டும்தான் தொடர்பு கொண்டவை என்று எண்ணிய ஒருகாலம் இருந்தது. ஆனால், இவை அனைத்தும் மலை ஏறிப்போனதாகவே இப்பொழுது கருதவேண்டியுள்ளது.

மென்பொருட்களை மட்டுமே Virus தாக்கும் என்ற உண்மையானது - 2000 ஆம் ஆண்டு ஏப்ரலில் பொய்த்துப் போய்விட்டது. ஏனெனில், இக்காலப்பகுதியில் வந்த W 95, CIH என்ற Virus ஆனது, கணினி வன்பொருளை (Hardware) தாக்கியது.

இதன் பின்புதான், Computer Virus இற்கு வன்பொருள், மென்பொருள் என்ற பாகுபாடு இல்லை என்பது தெரியவந்தது. ஏனெனில், வன்பொருட்களைத் தாக்கும் அளவிற்கு Virus Programme எழுதுபவர்கள் முன்னேறியுள்ளனர்.

இனி நாம் W 95 CIH என்ற Virus ஆனது, எவ்வாறு Hardware ஐ தாக்கியது என்பதனைப் பார்ப்போம். இந்த Virus ஆனது, வன்பொருளில் உள்ள Bios தாக்கியுள்ளது. இங்கு Bios என்பது Mother Board இல் ஒரு Chip ஆகும்.

இதில் கணினி செயற்படத் தொடங்கும் முன்னர், கணினியில் என்ன என்ன பாகங்கள், வசதிகள், திறன்கள் உள்ளன என்பதைக் கணினிக்குச் சுட்டிக்காட்ட எழுதப்பட்ட ஓர் சிறிய Programme ஆகும்.

எனவே, இந்த Bios Chip இலுள்ள Programme பாதிக்கப்பட்டால் அல்லது அழிக்கப்பட்டால், ஒருபோதும் கணினி செயற்படாது. இந்தக் கணினி Virus - கணினியைப் பாதித்தால், கணினியிலுள்ள Bios Chip இனை மாற்றவேண்டும். சிலவேளை Mother Board ஐக்கூட மாற்றவேண்டிவரலாம்.

(தொடரும்....)

**சே.ஜெயானந்தன்**
வருகை விரிவுரையாளர் (கணினி)
தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## குடாநாட்டு சந்தை நிலவரம்



| பொருட்கள் | சுன்னாகம் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/= | 70/= | 35/= | 40/= | 50/= | 30/= | 25/= |
| வெண்டிக்காய் | 15/= | 30/= | 25/= | 10/= | 30/= | 20/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 70/= | 70/= | 80/= | 80/= | 70/= | 70/= |
| கத்தரிக்காய் | 40/= | 40/= | 45/= | 40/= | 50/= | 35/= | 30/= |
| பாகற்காய் | 70/= | 40/= | 80/= | 75/= | 70/= | 65/= | 60/= |
| கரட் | 30/= | 40/= | 60/= | 40/= | 40/= | 40/= | 40/= |
| பீற்றூட் | 20/= | 30/= | 30/= | 20/= | 25/= | 15/= | 20/= |
| முருங்கைக்காய் | 20/= | 70/= | 20/= | 20/= | 40/= | 15/= | 20/= |
| வெங்காயம் | 35/= | 45/= | 30/= | 38/= | 45/= | 40/= | 40/= |
| பச்சை மிளகாய் | 30/= | 40/= | 50/= | 35/= | 40/= | 40/= | 30/= |

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# அதிகார அரசியல் பொம்மலாட்டம்

முக்கிய மூன்று அமைச்சுக்களைத் தன்வசம் கைப்பற்றிக்கொண்டபின், நேற்றிரவு சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பொதுமக்களுக்கு ஆற்றிய உரையில் - தனது இந்த அதிரடி நடவடிக்கைக்கான காரணிகளைக்கூறி, தனது செயலை நியாயப்படுத்த முனைந்துள்ளார்.

அவர் தனது செயலுக்குக் கூறும் பிரதான காரணம்- நாட்டின் பாதுகாப்பு. துணைக்காரணம் - பொதுமக்களின் நலன்.

சந்திரிகா - நாட்டின் பாதுகாப்பில் காட்டும் அக்கறை வியப்புக்குரிய ஒன்றாகும். இவரது ஆட்சிக் காலம் - சிறிலங்காவில் போர் மேகம் முற்றாகக் கவிந்த, நாட்டின் எந்தப் பிரதேசத்திலும், எந்த மக்களுக்கும் - எந்த வகையிலும் பாதுகாப்பற்ற இருண்ட காலமாக இருந்ததை அனைவரும் அறிவர்.

பாதுகாப்பு நடவடிக்கை என்ற பேரில், படைவலுவைப் பயன்படுத்தி, பாதுகாப்புக் கெடுபிடிகள் மற்றும் மக்கள் மீதான அழுத்தங்கள் அதிகரித்திருந்த காலம் அவரது ஆட்சிக்காலமே.

பாதுகாப்புக்கான செய்தித் தணிக்கை என்ற பெயரில், ஊடக சுதந்திரம் என்பது, முற்றாக நிராகரிக்கப்பட்டிருந்த காலம். பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள் - ஆயுதப் படையினரால் அடிக்கடி தாக்குதல்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் இலக்காகி, சிலவேளைகளில் உயிரையும் இழக்கவேண்டிய அளவுக்குப் பாதுகாப்புப் பலவீனப்பட்டிருந்ததும், சந்திரிகாவின் அந்த ஏழாண்டு ஆட்சிக்காலத்தில தான்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இறுக்கமாக அமுல் செய்து, அப்பாவித் தமிழர்களையும், அவரது அரசியல் எதிரிகளையும் கைதுசெய்து, சித்திரவதைக்குள்ளாக்கி, சிறையில் விசாரணைகள் எதுவுமின்றிக் காலவரையறையின்றி அடைத்து வைத்ததும், அவசரகால நிலைமையின்கீழ், நாடு முழுவதையும் நிரந்தரமாக வைத்திருந்ததும் அதேகாலத்தில்தான்.

அவரது ஆட்சிக்காலப்பகுதியில் தான் - சிறிலங்காவின் தலைநகர் முதல், வடக்கு - கிழக்குவரை பாதுகாப்பு என்பது, கேள்விக்குறியாக விளங்கியது. மக்கள் அனைவரும் அச்சமும், பேடிமையும், அடிமைச் சிறுமதியும் உச்சத்தில் கொண்டவர்களாக வாழ்க்கை குறித்த நிச்சயத்தன்மையற்றவர்களாக பீதியில் வாழ்ந்திருந்ததும் அந்தக் காலத்தில்தான்...

அப்போதும் பாதுகாப்பு அமைச்சு அவர்வசமே இருந்தது. அப்போது நாட்டின் பாதுகாப்புக்கு ஏற்பட்ட பேரழிவு மாதரி, எப்போதுமே ஏற்பட்டதுமில்லை. அவரது அந்த ஆடசிக் காலத்தில் நிலவிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் குறித்துத் தட்டிக்கேட்க எவரும் பலமாக இருக்கவில்லையென்பதும் உண்மைதான்.

ஜனாதிபதியும் - பிரதமரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக அப்போது விளங்கியமையானது, ஜனாதிபதியின் அனைத்துச் செயற்பாட்டிற்கும் அனுகூலமாக இருந்தது.

இன்றோ சமாதானம் முழுமையாக நிலவுகின்ற சூழலில், தமிழ் - சிங்கள மக்களிடையே நீடித்த சமாதானத்திற்கான புரிந்துணர்வுச் செயற்பாடுகள் முனைப்புக் கொண்டுள்ளநிலமையில், ஜனாதிபதி - நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று, அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதுதான் விசித்திரமாகவுள்ளது.

ஒருவேளை, சமாதான நகர்வுகளைத்தான், யுத்த நிறுத்தத்தைத்தான் - ஜனாதிபதி பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் என்று எண்ணுகிறாரோ? அப்படியும் எண்ணச் சாத்தியமில்லை. ஜனாதிபதியே, தான் விடுதலைப் புலிகளுடன் பேசத்தயார் எனச் சமாதானச் சமிக்ஞையையும் காட்டியுள்ளநிலையில், அது எப்படிச் சாத்தியமாகும்?

விடுதலைப் புலிகளுடன் பேசத்தயார் என்று, எந்தத் துணிச்சலில் சந்திரிகா கூறமுயன்றாரோ தெரியவில்லை.

சந்திரிகாவின் இந்த அதிரடி நடவடிக்கைக்குக் கைதட்டி, பாராட்டி, ஆசீர்வாதமும் வழங்கும் சிறிலங்காவின் பேரினவாதக் கட்சிகளும், சக்திகளும் - அவரது இந்தக் கூற்றை அங்கீகரிப்பார்களா? ஆதரிப்பார்களா?

நிச்சயமாக இல்லை!

அப்படியானால், அவர் ஏன் விடுதலைப் புலிகளுடன் பேசத் தயார்... அதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்கிறார்?

அதுதான் இன்றைய அரசியல் யதார்த்தம். அவர் அப்படித்தான் கூற வேண்டும் என்பது அரசியல் விதி. அதனை மீற நிறைவேற்று அதிகார ஜனாதிபதியால்கூட முடியாது.


சிறிலங்கா அரசினையும், ஜனாதிபதியையும் மாறிமாறி இயக்கும் - தொலைக்கட்டுப்பாட்டுக் கருவிகள் - சர்வதேச சமூகத்தின் கரங்களிலேயே உள்ளது.

பிராந்திய வல்லரசும், சர்வதேச வல்லரசும் - இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தத்தம் ஆதிக்கவலுவை விஸ்தரிக்கும் பூலோபாயங்களுக்குச் சிறிலங்காவையே தளமாக்கியுள்ளார்கள். இந்தநிலையில், சமாதானம் குறித்த நகர்வுகளை நெறிப்படுத்துபவர்களாகவும் இவர்களேயுள்ளனர்.

இதனடிப்படையில் சிறிலங்காவின் அரசியல் அரங்கத்தில், ஒரு பொம்மலாட்டம் ஆரம்பமாகியுள்ளது. ஆட்டுவிப்பவர்கள் யாரோ... ஆட வேண்டியவர்கள் - ஜனாதிபதியும், பிரதமருமே... இந்தப் பொம்மலாட்ட முடிவில் என்ன நடக்கும் என்பதே கேள்வி. இப்போதுதான் ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கிறது.

ஜனாதிபதியின் அதிரடிக்கு - பிரதமர் என்ன பதிலடி கொடுக்கப் போகிறார் என்பது, அவர் அமெரிக்காவிலிருந்து வந்ததும் தெரிந்து விடும்.

## நாடும் நடப்பும்




செய்தி - ஜனாதிபதி திலக் மாரப்பனவிடமிருந்து பாதுகாப்பு அமைச்சை பறித்தமை சமாதான முயற்சிகளை பாதிக்கும் வாய்ப்புள்ளது.

# புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகள் சமாதான நடவடிக்கைகளுக்கு சாதகமானது

## அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ

விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக யோசனைகளை சமர்ப்பித்தமை சமாதான நடவடிக்கைகளில் மிகவும் சாதகமான முன்னெடுப்பாக அமைந்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதுவரை பேச்சுக்களிலேயே வலியுறுத்தி வந்த பல விடயங்களை முதன்முறையாக ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண்பதற்கான யோசனைகளை விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பி.பி.சியின் 'ஏசியா ருடே' நிகழ்ச்சிக்கு நேற்றுமுன்தினம் அளித்துள்ள விசேட பேட்டியிலேயே வெளிவிவகார அமைச்சர் இந் தக் கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையை அடிப்படையாகக் கொண்டு சமரசத் தீர்வு காணவேண்டும் என்று ஒஸ்லோவில் விடுதலைப் புலிகள் இணக்கம் கண்ட சமாதான முயற்சிகளில் அமெரிக்கா முதன்மை செயற்பாட்டாளராக இருந்ததாகவும் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

புலிகளுடைய யோசனைகள் ஒஸ்லோவில் காணப்பட்ட இணக்கப்பாட்டிலிருந்து சற்றே அப்பால் சென்றுள்ளதாக புலப்படுவதால் அவர்கள் ஒஸ்லோ உடன்பாட்டிற்கு திரும்ப வேண்டியிருக்கும் என்று ரிச்சர்ட் ஆர்மிட்ரேஜ் ஊடகவியலாளர்களிடம் கூறியதாகவும் வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்க முடியுமென்பதுடன் அதிலிருந்து முன்செல்ல முடியுமென்பதும் முக்கியமான விடயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மணற்காட்டுப் பகுதியில்

# மண் அகழ்வினைக் கட்டுப்படுத்த 7 பிரதிநிதிகள் கொண்ட குழு தெரிவு

வடமராட்சி கிழக்கு - மணற்காட்டுப் பகுதி, அதனை அண்டியுள்ள பகுதிகளுக்கு மண் அகழ்வுக்கு விதிக்கப்பட்ட தடையை விலக்கிக்கொள்ள, அப்பகுதி பொது அமைப்புக்கள் முன்வந்துள்ளன.

கட்டுப்பாடற்ற வகையில் மண் அகழ்வதை கட்டுப்படுத்துவதற்கு, மணற்காட்டை அண்டிய பகுதிகளில் வசிப்போரில் ஏழு பிரதிநிதிகள் கொண்ட குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டுள்து.

இப்பகுதியில் நாளாந்தம் 500 இற்கும் மேற்பட்ட டிராக்டர், லொறி ஆகியன மண் ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (17)

# நீரைத் தனியார் மயப்படுத்துவதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்!

(கொழும்பு)

நீரைத் தனியார் மயப்படுத்துவதற்கு எதிராக - மக்கள் விடுதலை முன்னணி - உயர்நீதிமன்றத்தில், அடிப்படை உரிமைமீறல் வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்துள்ளது.

நீரைத் தனியார் மயமாக்கும் நடவடிக்கை - தனிநபர் சுதந்திரத்தைப் பாதிக்கும் செயலாகும் என்று, ஜே.வி.பி. அந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளது.

நீரைத் தனியார் மயப்படுத்தும் பிரேரணை - நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படுகின்றபோது, அதனைச் சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடுதல்வேண்டும் என்றும், நாடாளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும், ஜே.வி.பி நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, நீரைத் தனியார்மயப்படுத்துகின்ற திட்டமொன்றை நாடாளுமன்றத்தில் கொண்டுவர இருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு கொண்டுவரப்பட்டதும், நீரினைக் கிணற்றிலிருக்கும்போது, இன்னொருவருக்கு விற்பனை செய்யும் உரிமையை வழங்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

# கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளையில் அடைவு நகையை மீளப்பெற முடியாத நிலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மக்கள் வங்கிக்கிளையில் வைத்த அடைவு நகையினை மீளப்பெறுவதற்கு, பணத்தினை கையளித்து ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ள நிலையிலும், உரித்துடையவர்களுக்கு இன்னமும் நகைகள் கையளிக்கப்படவில்லை என, சம்பந்தப்பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

1983 ஆம் ஆண்டு விவசாய நடவடிக்கையினை மேற்கொள்ளும்பொருட்டு, பலர் தங்கள் நகைகளை அடகுவைத்து, வங்கியில் பணம் பெற்று பின்னர் நகைகளை மீளப்பெறச்சென்றபோது பாதுகாப்பு நிலைமை காரணமாக நகைகளை கொழும்புக்கு கொண்டு சென்றதாக அப்போது அறிவிக்கப்பட்டிருந்தது.

பின்னர் 2002 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் மக்கள் வங்கிக் கிளை திறக்கப்பட்டதையடுத்து, முன்னர் அடகுநகைகளை வைத் தவர்கள், பணம் செலுத்தினால் ஒருமாதத்தில் நகைகள் மீளளிக்கப்படுமென, பத்திரிகை வாயிலாக தெரியப்படுத்தியிருந்ததையடுத்து பலர் பணம் செலுத்தியதாக அறிய முடிகின்றது. (122)

# சாவகச்சேரி - சுன்னாகம் ஊடாக மினிபஸ் சேவை

சாவகச்சேரியில் இருந்து கனகம்புளியடி, புத்தூர்ச்சந்தி ஊடாக - சுன்னாகம் வரை செல்லும் 775 ஆம் இலக்க வழித்தடத்தினூடான தனியார் சிற்றூர்திச் சங்கத்தினால் கடந்த வாரம் முதல் மினிபஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு இடப்பெயர்வு காலம்வரை, இதே வழித்தடத்தில் சாவகச்சேரியிலிருந்து சங்கானை வரை போக்குவரத்துச்சேவை நடாத்தப்பட்டுவந்தது. இடப்பெயர்வோடு இடைநிறுத்தப்பட்டிருந்த இச்சேவையை மீள ஆரம்பிக்குமாறு பல தடவைகள் வடபிராந்திய போக்வரத்துச்சபையிடம் இப்பகுதி மக்களால் கோரிக்கை விடப்பட்டபோதும், இச்சேவை ஆரம்பிக்கப்படவில்லை. தற்போது சிற்றூர்திச் சங்கத்தினரால், மீளவும் சேவை நடாத்தப்படுவதால் இப்பகுதி மக்களும் மாணவர்களும் பெரிதும் பயனடைந்துள்ளனர். (24)

# சமாதானத்திற்கு எதிரான சந்திரிகாவின் சட்டரீதியான சதிப்புரட்சி

இலங்கையில் சமாதானம் கதவைத் தட்டிக்கொண்டு நின்ற சமயத்தில், ஜனாதிபதி சந்திரிகா - அரசியல் சட்டரீதியாக ஒரு சதிப்புரட்சியை மேற்கொண்டிருக்கிறார்.

நாடாளுமன்றக் கட்டடத்தை இருவாரங்களுக்குத் தடைசெய்து, மூன்று முக்கிய அமைச்சர்களைப் பதவிநீக்கி, அதிரடி நடவடிக்கையைச் சந்திரிகா எடுத்திருக்கிறார்.



இனி, ரணில் ஆட்சியைக் கலைக்கும் பிரகடனத்தை அம்மையார் வெளியிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆட்சிபீடத்துக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ரணிலின் அரசாங்கத்தை, நிறைவேற்று அதிகாரம் என்ற பலத்தைப் பிரயோகித்து, அந்தரத்தில் நிற்கச்செய்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா.

தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை நிறுவும் யோசனையை - விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள நிலையில், சந்திரிகா இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கும் அவர் அழைக்கிறார். எந்த அடிப்படையில் பேச்சு?

சுதந்திர இலங்கையில், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எடுத்திருக்கும் திடீர் அரசியல் அதிரடி நடவடிக்கை, அரசியல் யாப்பின்கீழ் நடந்த சதிப்புரட்சி என்பதில் சந்தேகமில்லை.

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி பதவியை - ஜே.ஆர்.ஜெயவர்த்தன உருவாக்கியபோது, இப்படியும் திடீர் நடவடிக்கையை ஒரு ஜனாதிபதி மேற்கொள்ள முடியும் என்று நினைத்திருக்கமாட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருக்கும்போது, அதுவும் ஜே.ஆரின் வாரிசு பிரதம மந்திரியாகப் பதவி வகித்துக்கொண்டிருக்கையில், அவர் இலங்கைக்கு வெளியே வெளிநாடொன்றில் தங்கியிருக்கையில், மூன்று முக்கிய அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்து, நாடாளுமன்றத்தில் அடுத்த வருடத்துக்குரிய வரவு-செலவுத் திட்டம் கொண்டுவருவதற்குத் தீர்மானிக்கப்பட்ட தினத்தில், நாடாளுமன்றம் கூடாமல் தடுத்து, கூட்டத்தை ஒத்திவைத்திருப்பது - இலங்கையின் அரசியல் வரலாற்றில் நடந்துள்ள அதிர்ச்சிகரமான புதுமை.

'எனக்குள்ள அதிகாரங்களை நான் இன்னும் முழுமையாகப் பயன்படுத்தவில்லை. உரியநேரம் வரும்போது, எனக்குள்ள அதிகாரங்களைப் பாவிப்பேன்' என்று ஜனாதிபதி சந்திரிகா கூறிவந்துள்ளார்.

உரியநேரம் இதுதானா?

இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டுமென்று உலகநாடுகள் வற்புறுத்தி வந்தன.

பயங்கரவாதப் புலிகள்தான் சமாதானத்தை விரும்பவில்லை என்று சந்திரிகாவும், அவரது சகாக்களும் கிளிப்பிள்ளைபோலச் சொன்னதையே திரும்பத்திரும்பச் சொல்லி வந்தனர்.

'சமாதானத்துக்கான போர்' என்று புதிய பெயர் சூட்டி, சந்திரிகா போரைத் தொடர்ந்து கொண்டிருந்தார்.

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக நான்கு மாதங்கள் தொடர்ந்து போர்நிறுத்தம் செய்தபோதும், சந்திரிகா போரைத் தொடர்ந்தார்.

இனிவேறு வழியில்லை என்று விடுதலைப் புலிகளும் போர்நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தனர். அரச படைகள் தாக்குதலைத் தொடர்ந்தனர். புலிகள் திருப்பித் தாக்கியதில் - பெரும் இழப்பை அரச படைகள் சந்தித்தன.

இதன்பின், பேச்சுவார்த்தைக்குச் சந்திரிகாவும் தயாரானார். மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துக்கு ஒப்புக்கொண்டார். ஆனாலும், இதயசுத்தியோடு பேச்சுக்கள் நடைபெறவில்லை.

இந்நிலையில்தான், பொதுத்தேர்தல் வந்தது. ரணில் தலைமையில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தது.

நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி! ஆனால், நிறைவேற்று அதிகாரம் சந்திரிகாவின் கையில்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி - ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், நாடாளுமன்ற ஆட்சி வேறொரு கட்சியிடமும் இருப்பது உலக அதிசயமல்ல.

பிரான்சில் இப்படி அமைந்திருந்தது. இருதரப்பும் முரண்டுபிடிக்காமல், நாட்டின் முன்னேற்றம், அமைதி கருதி இருதரப்பும் ஒத்துழைத்தன.

இலங்கையில் ஆட்சி அதிகாரப்போட்டி வலுப்பெற்றது. அதிகாரப் போட்டியின் உச்சக்கட்டமாக - ஜனாதிபதி சந்திரிகா இப்போது இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்.

1953 ஆம் ஆண்டில் நடந்த அரசின் ஹர்த்தாலைத் தொடர்ந்து, சேர் ஜோண் கொத்தலாவல ஆட்சிப் பொறுப்பேற்றுப் புதிய பிரதமராகப் பதவியேற்றார். முதல் பிரதமர் டி.எஸ். சேனநாயக - குதிரையிலிருந்து விழுந்து செத்துப் போனதும், தனக்கே பிரதமர் பதவி வருமென்று எதிர்பார்த்திருந்த சேர் ஜோணுக்கு, கட்சிக்குள் எதிர்ப்பிருந்தது. இதனால், டட்லி பதவி விலகியபின், பதவியேற்ற சேர் ஜோண்- தனக்கு எதிராக இருந்த சேர்.லலித் ராஜபக்ஷவையும், ஜி.ஜி.பொன்னம்பலத்தையும் அமைச்சர் பதவியிலிருந்து விலகுமாறு பிரதமராகப் பதவியேற்றதும் கேட்டுக்கொண்டார். அவர்களிருவரும் பதவி விலகினர். அவர்களைச் சேர் ஜோண் பதவி நீக்கம் செய்யவில்லை.

இதன்பின், 1995 ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்க - பிரதமராகப் பதவி வகித்தபோது, சுட்டுக்கொல்லப்பட்டார். இவரைத் தொடர்ந்து காபந்துப் பிரதமராகப் பதவி வகித்த டபிள்யூ.தஹநாயக்க - பண்டாரநாயக்க அமைச்சரவையில் தொடர்ந்து அமைச்சர்களாக இருந்த சி.பி.டி. சில்வா, மைத்திரிபால முதலிய அமைச்சர்களை அதிரடியாகப் பதவி நீக்கம் செய்தார்.

இலங்கையில் பதவி நீக்கப்பட்ட அமைச்சர்கள் இவர்களாகவே இதுவரை இருந்தனர். இப்போது ரணில் அரசில் முக்கிய அமைச்சர்கள் மூவரை -

ஜனாதிபதி பதவி நீக்கம் செய்திருக்கிறார்.

பிரதம மந்திரி வெளிநாட்டில் இருந்த சமயத்தில், ஜனாதிபதி இந்தப் பதவிநீக்க நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்.



இராணுவ ஆட்சிகள் நடந்த பாகிஸ்தான், பர்மா போன்ற அயல்நாடுகளில் இது போன்ற அதிரடிப் பதவிநீங்கச் செயல்கள் அதிர்ச்சியளித்ததில்லை.

ஆனால், ஜனநாயகம் பற்றியும், தேசிய ஒருமைப்பாடும் ஐக்கியமும் பற்றிப் பேசும் இலங்கையில், இது நடந்திருக்கிறது.

நாட்டின் பொருளாதாரம் மிகமோசமான நிலையிலிருக்கும் இந்தக் காலத்தில், சமாதான முயற்சியினால்தான் உலக நாடுகளின் உதவிகள் கிடைக்குமென்றநிலையில் -

சந்திரிகா இப்படி அதிரடி நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபுத்திட்டம் பற்றி - அமெரிக்கா, ஐரோப்பியயூனியன் போன்றவை வரவேற்றுக் கருத்துச் சொல்லி, சமாதானப் பேச்சைத் தொடரவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கும் இந்த சமயத்தில், சந்திரிகா ஏன் இந்த நடவடிக்கையை எடுத்தார்.

விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கு வருமாறு ஜனாதிபதி அழைத்திருக்கிறார். இனியும் பேச்சுவார்த்தை என்று காலங்கடத்தலா?

விடுதலைப் புலிகளின் வரைபு - நாட்டுக்கு ஆபத்து என்று கூறும் சந்திரிகாவுடன், விடுதலைப் புலிகள் எந்த அடிப்படையில் பேச்சைத் தொடங்குவது?

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபு பற்றி - இந்தியா இதுவரை கருத்து வெளியிடவில்லையே ஏன்? சந்தேகிக்க இடமில்லையா, சந்திரிகா - இந்தியா போகப்போவதாக அறிவித்த பின்னர், தானே இந்தத் திடீர் நடவடிக்கையை எடுத்திருக்கிறார்!

இலங்கை - அந்நிய வல்லரசுகளுக்கு ஒரு ஆடுகளமாக மாறிவிட்டதா?

**எஸ்.எம்.ஜி**

# தென்மராட்சி வீதிப்போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் பிரச்சினைகள்

## மண்ணும் மக்களும்

தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்தத்தினால், பல்லாயிரக்கணக்கான மக்கள் இடப்பெயர்வைச் சந்தித்தனர். தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழலில், அவர்கள் தமது சொந்தஇடங்களில் மீள்குடியேறி வருகின்றனர்.

இரண்டு வருடங்களாகச் சன நடமாட்டமின்றி இருந்தமையால், தென்மராட்சியிலுள்ள பல வீதிகளின் இரு மருங்கும் பற்றைகள் வளர்ந்து பயங் கரமாகக் காட்சியளிக்கின்றது. வீதிகளின் இருமருங்கிலும் பற்றைகள் காணப்படுத்துவதால், வீதியில் போக்கு வரத்துக்குப் பெரும் இடையூறாகக் காணப்படுகிறது. இரண்டு வாகனங்கள் ஒன்றையொன்று எதிர்கொள்ளும் போது, பெரும் சிரமத்திற்கு மத்தியிலேயே ஒன்றையொன்று விலகிக்கொள்கிறது.

இதனால், விபத்துக்கள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. மேலும் இந்தப் பற்றைகள் -திருடர்களுக்கு நல்லதொரு மறைவிடமாகவுள்ளது. இதனால், இந்த வீதிகளின் வழியே தனியாகச்செல்லும் பெண்களிடம், நகைகள் அபகரிக்கப்படும் சம்பவங்களும், சேஷ்டை புரிவதும் தொடர்கதையாகவே உள்ளது.

வீதிவழியே தனியாகச் செல்லும் பாடசாலை, தனியார் கல்வி நிறுவன மாணவிகளைத் தகாத வார்த்தைப் பிரயோகங்களால் கிண்டல் செய்யும் இளைஞர் கூட்டமும் இந்த வீதிகளில் தமது சாகசங்களைப் புரிகின்றனர். இதனால், பற்றைகள் வளர்ந்த வீதிகள் வழியே செல்லப் பெண்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இந்த வீதிவழியே சன நடமாட்டமும் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

முற்றாகத் தரைமட்டமான வீட்டுக் காணிகளும், வெற்றுக் காணிகளுமே இவ்வாறு பற்றைகள் மண்டிக் காட்சியளிக்கின்றன. இப்பற்றைக் காணிகளினுள் வெடிபொருட்கள் இருக்கலாமென்ற அச்சத்தாலும், இடப்பெயர்வின்போது யாழ். மாவட்டத்தை விட்டு வெளியேறி, வெளிநாடு சென்றவர்களது நிலங்களுமே இவ்வாறு பற்றைகள், முட்புதர்கள் நிறைந்து காட்சியளிக்கின்றன.

பற்றைகள், முட்புதர்கள் பெருமளவு மண்டிக் காணப்படுவதால், பாம்புகள் பெருமளவில் உள்ளதாக இந்தப் பகுதியிலுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பாம்புகள் - குடிமனைக்குள் புகுந்து, கால்நடைகளைத் தீண்டுவதாகவும், இதனால் இரவுவேளையில் மக்கள் வீட்டிற்கு வெளியே அச்சத்துடனேயே நடமாடவேண்டி இருப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

அவ்விடத்திலேயே வசிக்கும் சிலரது காணிகள் - பற்றைகள் நிறைந்து காணப்படுவதால், அதனைத் துப்புரவு செய்யுமாறு காணிகளின் உரிமையாளர்களிற்கு எததனையோ தடவை கூறியபோதும், அவர்கள் வெடிபொருட்கள் இருக்கலாமென்று அச்சம் தெரிவிக்கின்றனர்.

தற்போது சாவகச்சேரியில் வெடிபொருள் அபாயம் உள்ள இடங்களை- வெடிபொருட்களை அகற்றிவரும் "ஹலோ ட்ரேஸ்" நிறுவனத்திற்குத் தெரியப்படுத்தினால், அவர்கள் அவ்விடங்களைப் பார்வையிட்டு வெடிபொருட்கள் உள்ளதா? இல்லையா? என அறிவிப்பார்கள். எனவே, பயங்கரமாகக் காட்சியளிக்கும் இந்தப் பற்றைகள், முட்புதர்களைக் காணியின் உரிமையாளர்கள் துப்புரவு செய்து, வீதிப்போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும். வீதிகளின் இருமருங்கிலும் பல மீற்றர் உயரத்திற்குப் பற்றைகளும், முட்செடிகளும் வளர்ந்து நிற்பதால் - துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் - எதிரே வாகனங்களை எதிர்கொள்ளும்போது, முட்செடிகள் உடலில் குற்றிக் காயங்களை ஏற்படுத்துகின்றன.

இவ்வாறு இப்பற்றைகளால் மக்களுக்குப் பெரும் இடையூறுகள் ஏற்பட்ட வண்ணமே உள்ளன. குறிப்பாக கல்வயல், கெருடாவில், கற்குழி, மட்டுவில், சரசாலை, நுணாவில் பகுதிகளிலுள்ள வீதிகளிலேயே இவ்வாறு பற்றைகளும், முட்செடிகளும் வளர்ந்து, மிகவும் பயங்கரமாகக் காட்சியளிக்கிறன.

எனவே, காணிகளின் உரிமையாளர்கள் - மக்கள் படும் இந்த அவலங்களையாவது கருத்திற் கொண்டு, இனியும் தாமதிக்காது பற்றைகளை வெட்டித் துப்பரவு செய்து, வீதியினை மக்கள் இடையூறின்றிப் பயணிக்க விடுவார்களா? அல்லது சாவகச்சேரி நகரசபை நடவடிக்கை மேற்கொள்ளுமா? ♦♦

**ந.கஜமுகன்**

## ஜனாதிபதி யாசிர் அரபாத் - பிரதமர் கூரே

# இருவருக்குமிடையேயான பிரச்சனைகளால் இஸ்ரேலுடனான பேச்சு ஆரம்பிப்பது தாமதம்



பலஸ்தீன பிரதமர் அகமட் கூரேக்கும் அதிபர் யாசர் அரபாத்திற்கும் இடையே பாதுகாப்பு அதிகாரம் தொடர்பான பிரச்சினைகளால் மீண்டும் இஸ்ரேலுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இருவரும் மத்திய குழுக் கூட்டத்தில் சந்தித்து தம்மிடையே காணப்படும் வேற்றுமைகளை தீர்த்துக்கொள்ளத் திட்டமிட்டதாக பலஸ்தீனிய அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

பிரதமர் கூரேயின் தற்காலிக அரசு செவ்வாய்க்கிழமையுடன் முடிவடைந்துள்ளது. இதனால் காபந்து அரசொன்றை அராபாத் உருவாக்கியுள்ளார். இதன்மூலம் இருவரிடையே ஏற்பட்டுள்ள கருத்துவேறுபாடுகளை தீர்த்துக்கொள்வதற்கு கால அவகாசத்தை ஏற்படுத்தியுள்ளார்.

மூன்று ஆண்டுகள் தொடரும் மரணங்களுக்கும், வன்முறைகளுக்கும் முடிவு ஒன்றை காண்பதற்காக பலஸ்தீனப் பிரதமரும், இஸ்ரேல் பிரதமரும் இவ்வார இறுதியில் சந்திப்பதற்கு திட்டமிட்டிருந்தார்கள்.

பலஸ்தீன இஸ்லாமிய தீவிரவாதிகளின் இஸ்ரேல்மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படுவது சமாதான திட்டவரைபில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனால் பலஸ்தீன தீவிரவாதிகளை கட்டுப்படுத்துவதற்கான அதிகாரங்களை யார் கையாள்வது என பதில், ஜனாதிபதி அராபாத்தும் பிரதமர் கூரேயும் முரண்பாடு

## உலக நோக்கு

கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கீழ் மட்டத்தில் பலஸ்தீனத்துடன் சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கான தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் சில்வன் சலோம் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

# பக்தாத்தில் மோட்டார் குண்டுத்தாக்குதல் ஏழு அமெரிக்கப் படையினர் படுகாயம்!



ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மோட்டார் குண்டுத் தாக்குதலில் நான்கு அமெரிக்கப்படையினர் காயமடைந்துள்ளனர்.

இத் தாக்குதல் - நகரையே அதிர வைத்ததாகவும், தாக்குதல் திக்கிரிஷ் நதிக்கு அருகில் அமைந்துள்ள விடுதியொன்றில், இருந்தவர்களால் குண்டுத் தாக்குதலின் அதிர்வுகளை அவதானிக்க முடிந்ததாக அறிவிக்கப்பட்டது.

பாக்தாத்தில் மேலும் 3 தாக்குதல்கள் செவ்வாய்க்கிழமை நடைபெற்றுள்ளது. இத்தாக்குதலில் பாதிக்கப்பட்ட அமெரிக்கப் படையினர் மூவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்கள். காயமடைந்த ஒருவருக்கு அவ்விடத்திலேயே சிகிச்சை வழங்கப்பட்டதாகவும், இராணுவ அதிகாரி தெரிவித்தார்.




## நகரசபை, சாவகச்சேரி

# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 20-11-2003 ஆந் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதே தினம் 10.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

நிர்மாணப் பயிற்சி நிலையத்தில் (இக்ராட்) 'தரம் எம் 9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் கோருவதற்கு தகைமையுடைவராவார்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்பு ரூபா சதம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் வற்றுடன் ரூபா சதம் |
|---|---|---|
| 01. பொது மலசலகூடத்தின் மதிற்சுவர் மற்றும் வேலி அமைத்தல். | 1000.00 | 600.00 |
| 02. பொது மலசலகூட காவலாளிக் கொட்டகை அமைத்தல் | 2000.00 | 600.00 |
| 03. சந்தை வடிகால் திருத்தம் | 2000.00 | 600.00 |
| 04. கொல்களத்திற்கான கழிவகற்றும்குழி அமைத்தல் | 500.00 | 600.00 |

கேள்வி பத்திரங்களை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 18-11-03 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதி 'செயலாளர், நகரசபை, சாவகச்சேரி' என்ற முகவரிக்கும் இணைப் பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் 20-11-03 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில்வேலையின் பெயர் குறிப்பிடப்படவேண்டும்.

**இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
05.11.2003.

மு.செ.சரவணபவ
செயலாளர்
நகரசபை சாவகச்சேரி

(சி-1778)


## ஊர்சுற்றி எழுதுவது

இனி என்ன நடக்கும்?

இதே கேள்விதான் நேற்று எங்கே எவரைப் பார்த்தாலும் எல்லோரும் கேட்ட கேள்வியாக இருந்தது. சந்திரிகா அம்மையார் 3 முக்கிய அமைச்சர்களைப் பதவி விலக்கி தமக்கு நம்பிக்கையானவர்களை அந்த அமைச்சுககளின் செயலாளர்களாக நியமித்திருக்கிறார்.

நாட்டு மக்களையும், பாதுகாப்புப் படையினரையும் அமைதியாக இருக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா கேட்டிருக்கிறார். நாட்டு மக்களும் பாதுகாப்புப் படையினரும், விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும், அதேசமயம் அமைதியாக இருக்கவேண்டும் என்றும் அமெரிக்காவிலிருந்து பிரதமர் ரணிலும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இந்த வேண்டுகோள் பற்றி சாதாரன பொது மகன் சிந்திக்கும் நிலையில் இல்லை. அவன் கேட்பது மீண்டும் போர் தொடங்குமா? என்ற கேள்வியைத்தான்.

ஏ-9 பாதையை மீண்டும் மூடி விடுவார்களா என்று ஒருவர் அவசரமாகக் கேட்டார். கொழும்புப்ப பக்கம் போவது பாதுகாப்பா? வன்னிப் பக்கம் போவது நல்லதா. இது இன்னொருவரது கேள்வி.

பல இடங்களிலும், வீதிகளிலும் இராணுவம் தங்கள் முகாம்களைப் பலப்படுத்துகிறார்கள். அரண்களைப் புதிதாக்குகிறார்கள். புதிய முள்ளுக்கம்பிகளை முகாம்களுக்கு முன் குவியலாகப் போட்டு அது பளபளத்துக்கொண்டு கிடக்குதுகள் என்று சிலர் போசிக் கொண்டனர்.

புலிகள் என்ன செய்யப்போகினம் எண்டு தெரியவில்லை என்றார் ஒருவர். அவையள் இடைக்கால நிர்வாக சபைக்குத் தங்களுடைய யோசனைகளைத் தெரிவித்திருக்கினம். இனி அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்பதுதான் கேள்வி என்றார் மற்றவர்.

இந்த இடைகால நிர்வாகசபை யோசனையை எதிர்த்துத்தானே சந்திரிகா அம்மையார் 3 அமைச்சுக்களையும் எடுத்துக்கொண்டிருக்கிறா? இனி என்ன செய்கிறது என்றார் ஒருவர்.

மக்களைப் பொறுமையாக இருக்கும்படியும், கடந்த தேர்தலில் மக்களுக்குத் தந்த ஆணையையும், தாம் மக்களுக்குக் கொடுத்த சமாதானத்தையும், சுபீட்சத்தையும் நிறைவேற்றுவதாகவும் அமெரிக்காவிலிருந்து பிரதமர் ரணில் சொல்லியிருக்கிறார்.

அமெரிக்காவில் ஜனாதிபதி புஷ்ஷைச் சந்தித்துப் பேசப்போகிறார். அவர் சும்மா வரமாட்டார். சந்திரிகா அம்மையாருக்கு நல்ல பதில் சொல்லுவார் என்றார் மற்ற ஒருவர்.

ஈராக்கில காலை வைச்சிட்டு கஷ்ரப்பட்டுக் கொண்டு கிடக்கிற புஷ் இலங்கையிலும் மூக்கை நுழைத்து என்னத்தைச் செய்யிறது என்றார் அடுத்தவர்.

அம்மா எல்லாம் சரியா யோசிச்சிட்டுத்தான் செய்திருக்கிறா. புலிகள் தங்கள் நிர்வாகத் திட்டவரைபைக் குடுக்கிறதற்கு முன்னரே ஆயத்தம் செய்துதான் இராணுவத் தளபதி பலகல்லவிடம் முப்படைகளின் கூட்டுத் தலைமைப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்.

கடற்படைத்தளபதி தயா சந்தகிரியையும், அமெரிக்காவுக்கு அம்மா அனுப்பியிருந்தவர்தானே.

அம்மா இதெல்லாம் செய்ததுமட்டுமல்ல, புலிகள் தமது திட்ட வரைபைக் குடுத்ததும், தாம் அடுத்த வாரம் இந்தியாவுக்குப் போய் இந்தியத் தலைவர்களைச் சந்திக்கப்போவதாகவும் அம்மா அறிவிச்சது தெரியாதோ.

என்னதான் செய்தாலும், அம்மா பேச்சுவார்த்தைக்கு வரச்சொல்லி விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்திருக்கிறாவல்லோ.

முந்தியும் அம்மா புலிகளுடன் பேசினவாதான். போன கிழமையும் டக்ளஸ் தேவானந்தா சந்திரிகா அம்மாவைச் சந்தித்துப் பேசிவிட்டு வந்தவர். கிழக்கைப் பிரிக்கக்கூடாது என்பதைப்பற்றி பேசத்தான் அம்மாவைச் சந்தித்ததாக டக்ளஸ் பிறகு சொன்னவர்.

ஆனால், புலிகளின் திட்டவரைபை, தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதால் தாங்கள் அதை வரவேற்பதாக புளொட் தலைவர் சித்தார்த்தன் சொல்லியிருப்பது டக்ளஸுக்குப் பிடித்திருக்காது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணித் தலைவர் வரதர் இலங்கையில் இல்லைப்போல முந்தியென்றால் எதுக்கெடுத்தாலும், இலங்கை வானொலி வரதரைப் பிடித்து கருத்துக் கேட்கும். வரதர் இலங்கையில் இல்லையோ? வானொலி அவரைக் கைவிட்டுட்டுதோ தெரியவில்லை.

அவர் இலங்கையில் இருந்திருந்தால் ஒரு பேப்பரிலையாவது அவற்றை கருத்தும் வெளிவந்திருக்கும். அவுஸ்திரேலியாவுக்கோ, இராஜஸ்தானுக்கோ போட்டார்போல.

அது சரி புலிகள் அம்மாவோட போய்ப் பேசிவினமோ? ஆரெண்டால் என்ன புலிகள் கொடுத்த இடைக்கால தன்னாட்சி, அதிகார சபை வரைபை ஏற்றுப் பேசுறதுக்குச் சம்மதமெண்டால் அவையள் பேசுவதற்கு தடை என்ன?

அப்ப இனியும் அம்மா பேச்சுவார்த்தை என்று காலம் கடத்திற யோசனையோ.

முதல்ல அம்மாவோ, ஐயாவோ இலங்கையில பெரிய ஆள் எண்டதை முடிவு செய்யட்டும். பிறகு மற்றதைப் பார்ப்போம்.

படைகளிலையும் அம்மாஆட்கள், ஐயாஆட்கள் எண்டு நிக்கப்போயினமோ என்ன கூத்தோ தெரியாது.

நடப்பதைப் பார்த்துக்கொண்டு நாமும் விழிப்புடன் இருப்பம்.

கூடிநின்று கதைத்தவர்கள் கலைந்து சென்று விட்டனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இலங்கையின் தற்போதைய நிலைமை; ஜப்பான் அரசு அவதானித்து வருகிறது!

## கொழும்பிலுள்ள தூதரகம் அறிக்கை

### நாற்சந்தி

எதிர்பார்தது போன்று ஜனாதிபதி சந்திரிகா - தனது அதிகார எல்லையை விஸ்தரிக்கத் தொடங்கி விட்டார். நாடு தழுவிய அவரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்துள்ளார். படைதரப்புக்கு அதிகாரங்களை அதிகரித்து, அவர்களின் பிரசன்னத்தையும் அதிகரித்துள்ளார்.

சந்தேகத்துக்குரியவர்களை கைது செய்யும் உத்தரவையும் பிறப்பித்துள்ளார்.

கொழும்பில் பொதுமக்களிடையே மீண்டும் பதற்றமும், அமைதி குறித்த நம்பிக்கையீனமும் அதிகரிப்பது அங்கிருந்து வரும் தொலைபேசி அழைப்புகள் மூலம் தெரிய வந்துள்ளது.

'இருதசாப்தங்களுக்கு பின் வந்த இந்த நீண்ட சமாதானக் காலம் ஓய்வு பெற்றுச் சென்றுவிடுமா?' - இதுவே அனைவர் மனதையும் அரிக்கும் கேள்வி.

கட்டளை பிறப்பிக்கப்பட்டு அதிகாரமும் வழங்கப்பட்டால் படைத்தரப்பினர் எவ்வாறு செயற்படுவர் என்பது ஜனாதிபதிக்குத் தெரியாத விடயமல்ல...

அடுத்த கட்டமாக அவர் என்ன செய்யப்போகிறார்? ரணிலின் வரவு எத்தகைய பிரச்சனைகளை ஏற்படுத்தும். பரபரப்பான செய்திகளுக்குரியனவையாக வரும் நாட்கள் அமையப்போவது நிச்சயம்...

புரிந்துணர்வு உடன்பாடும், போர்நிறுத்தமும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் எனக் கதிர்காமர் கூறியுள்ளதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

நாட்டில் வானிலை மட்டுமல்ல, அரசியல் சூழ்நில்லயும் மப்பும் மந்தாரமாகவே இருக்கிறது... 'எந்த நேரமும் பெருமழையோ, இடியுடன், கூடிய மழையோ, ஏன் சூறாவழியோ கூட ஏற்படலாம்.' வானிலை அறிவிப்பாளர் கூறுவது போன்றே, அரசியல் ஆய்வாளர்களும் எதிர்வு கூறுகின்றனர்.

'அமெரிக்காவின் ஆர்மிரேஜ்சும், ஐ.நா.வின் கோபி அனானும்' சமாதானத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளது தான் ஒரு ஆறுதல் என்கிறார் ஒரு அரசியல் அவதானி.

தெருவாசி

## பாதுகாப்பு விவகாரங்களில்...

கிறது என உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

முன்னதாக, இதுதொடர்பான விசாரணைகளை உயர்நீதிமன்ற நீதியரசர் நடாத்தும் விதங்களில் அதிருப்தி தெரிவித்தே, நீதியரசர் சரத் என். சில்வாவுக்கெதிராக ஆளும் ஐக்கிய தேசிய முன்னணியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் இந்தப் பிரேரணை சமர்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முன்னதாகவே நாடாளுமன்ற அமர்வுகள் ஒத்திப் போடப்பட்டுவிட்டதாக ஜனாதிபதி அறிவித்ததையடுத்து, அந்தப் பிரேரணை செல்லுபடியற்றதாக்கப்பட்டது.

அரசியலமைப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்டவராகவும், முப்படைத் தளபதியாகவும் விளங்கும் ஜனாதிபதியே, பாதுகாப்பு விவகாரங்களில் கூடுதல் அதிகாரம் கொண்டவர் எனவும்,

எனவே அவரது உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டே பாதுகாப்பு அமைச்சர் செயற்படவேண்டும் எனவும் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

### அமெரிக்கா ஆதரவு

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கும், ஜனநாயகத்தை நிறுவுவதற்கான செயற்பாடுகளுக்கும் அமெரிக்கா மீண்டும் ஆதரவு தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஷ் புஷ்ஷை - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசுவதற்கு முன்னதாக, வெள்ளை மாளிகையிலுள்ள ஜனாதிபதியின் பேச்சாளர் ஸ்கொட் மைக்கினென் இந்த ஆதரவை வெளியிட்டார்.

## சமாதான முயற்சிகளை...

கடந்த 2001 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 5 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கும், அத்தேர்தலில் மக்களால் வழங்கப்பட்ட ஆணையின் பிரகாரம் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றுக்கொண்ட பின்னர், தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாண்பது தொடர்பாக முக்கியமான நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

22 மாதங்களுக்கு மேலாக யுத்த நிறுத்தம் ஒன்று நிலைபெற்று வந்திருப்பதோடு, சிறிலங்கா அரசாங்கத்திற்கும், தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில், பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் நிகழ்ந்திருக்கின்றன.

இடைக்கால நிர்வாகம் ஒன்றுக்கான அரசாங்கத்தின் பிரேரணைக்கு, தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் பதில் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டிருப்பதோடு, இரு தரப்பினர் சார்பிலும் பரிமாறப்பட்டிருக்கும் பிரேணைகளின் அடிப்படையில், விரைவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அழிந்துபோயிருக்கும் வட - கிழக்கை மீண்டும் புனரமைக்கவும், புனர்நிர்மாணம் செய்யவும் இடம்பெயர்ந்த இலட்சக்கணக்கான மக்களை மீண்டும் குடியமர்த்தவும், வட-கிழக்கில் அவசரமாகத் தேவைப்படும் சமூக், பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தவும் போதுமான சுய ஆட்சி வாய்ப்புக்களை ஒரு இடைக்கால நிர்வாகம், வட - கிழக்கின் தமிழ்பேசும் மக்களுக்கு வழங்கும்.

2001 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 05 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு முன்னர் இருந்ததைவிட, நாட்டின் இன்றைய பாதுகாப்பு நிலைமை பாரியளவில் உயர்வாகவே உள்ளது.

கடந்த காலத்தில் முன்எப்போதுமே இருந்ததைவிட தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரமானதும், கௌரவமானதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான ஒரு தீர்வினைக் காண்பதற்கு இன்றுள்ள நிலைமை மிக நல்லதோர் சந்தர்ப்பத்தையே தந்திருக்கிறது.

இப்போதுள்ள அரசாங்கத்தை ஆட்டங்காண வைப்பதற்கு எடுக்கப்படும் தற்போதைய முயற்சிகள், சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு பாரிய தீங்கு விளைவிக்கும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவையாகும். சமாதான நடவடிக்கைகளுக்கு முழுநாட்டிற்கும், சர்வதேச சமூகத்திடமிருநது கிடைக்கப்பெற்றிருக்கும் நல்லெண்ணத்தையும், ஆதரவையும் அற்றுப்போகவும் செய்துவிடும்.

சமாதான முயற்சிகளை சீர்குலைத்து, இந்த முயற்சிகள் தொடர்பில் நிச்சயமற்ற நிலைமை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளைத் தவிர்த்துக்கொள்ளுமாறு - தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (சுரேஷ் அணி) ஆகிய கட்சிகளை உள்ளடக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியை மிக உறுதியாகக் கோருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் மக்களால் அளிக்கப்பட்ட ஜனநாயகத் தீர்வின் பிரகாரம் - முறையாகத் தெரிவுசெய்யப்பட்டு தனது பதவியை வகித்துக்கொண்டிருக்கும் ஒரு ஜனாதிபதி, கடந்த 2001 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 5 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் மக்களால் வழங்கப்பட்ட தீர்வினை மதிப்பதற்கு கடமைப்பட்டுள்ளார், என்பதையும், ஆட்சி முறைக்கான ஜனநாயக விதிகளை மீறுவது என்பது முழுநாட்டிலும் குழப்பமும், அராஜகமும் நிலவும் சூழ்நிலைக்கே இறுதியில் இட்டுச் செல்லும் என்பதையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிக உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

(கொழும்பு)

இலங்கையின் அரசியலில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்து ஜப்பான் அரசாங்கம் கரிசனையுடன் அவதானித்து வருவதாக கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளை மேலும் முன்னெடுத்துச் செல்லும் வகையிலும் ஜனநாயக அமைப்புக்களின் செயற்பாடுகளை மதித்தும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடங்கலாக சகல தரப்பினரும் ஆக்கபூர்வமான யதார்த்தமான வகையில் பரஸ்பரம் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று ஜப்பான் அரசாங்கம் நம்புவதாக தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக மாற்று யோசனைகள் குறித்து ஜப்பான் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கம் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக யோசனைகளின் சில அடிப்படை விடயங்களிலிருந்து விடுதலைப்புலிகளின் மாற்று யோசனைகள் வேறுபட்டிருப்பதாக ஜப்பான் அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளது.

வெகுவிரைவில் ஆரம்பமாகவுள்ள நேரடிப் பேச்சுவார்த்தைகள் ஊடாக இரு தரப்பினருக்கும் இடையிலான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்று ஜப்பான் நம்புவதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசியல்....

றவு அமைச்சுப் பேச்சாளர் நவ்தேசர்மா தகவல் வெளியிடும்போது -

இலங்கையின் திடீர் அரசியல் திருப்பங்கள் அதிர்ச்சியை அளித்துள்ளது. இந்த நிலைமையில் இலங்கையில் அரசியல் அமைப்பு நெருக்கடிகளை ஏற்படுத்தி, நிச்சயமற்ற சூழலை உருவாக்கி - தற்போதைய சமாதான முயற்சிகளை பாதித்து விடாது என்று இந்தியா நம்புகிறது.

இந்த அரசியல் நெருக்கடிகளுக்கு பேச்சுக்கள்மூலம் தீர்வு காண முடியும் என்று இந்தியா நம்புவதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களை அங்குள்ள அரசியல் தலைவர்களே பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டும். இதில் இந்தியா தலையீடு செய்யாது என்று, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந் சின்ஹா தெரிவித்தார்.

## அவசர....

செய்யவும் சிறையிலிடவும் முப்படைக்கும் ஊர்காவற்படைக்கும் அதிகாரம் கிடைக்கிறது. அத்துடன், சிறையிலிருப்பவர்களை சட்டத்தின் முன் நிறுத்தாது நீண்டகாலம் சிறையில் வைத்திருக்க இந்த அவசர காலச் சட்டம் இடமளிக்கிறது.

இத்தகைய அவசரகாலச் சட்டத்தின் கீழ் சில ஐ.தே.மு. அமைச்சர்களைக் கைதுசெய்ய ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகவும், அதற்கான ஆணைகள் தயார் நிலையிலுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், வெளிநாட்டு அமைச்சை மீண்டும் லக்ஷ்மன் கதிர்காமரின் கீழ் கொண்டுவரும் திட்டமும் தீட்டப்பட்டுவருவதாகவும் - செய்திகள் தெரிவிக்கின்றன.

# அமைச்சர்களை பதவிநீக்கியமை சரியானதொரு நடவடிக்கையாகும்!

## ஜே.வி.பி.ரில்வின் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி முக்கிய மூன்று அமைச்சர்களையும் பதவி நீக்கி, அதனை தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எடுத்துள்ள முயற்சியை அங்கீகரிப்பதாக, ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துளளார்.

ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எடுத்துள்ள முயற்சி தொடர்பாக, நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது, நாட்டின் பாதுகாப்பும், இறைமைக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனைக் கவனத்தில் எடுத்து - ஜனாதிபதி ஊடகத்துறை, பாதுகாப்பு, உள்துறை ஆகிய அமைச்சுப் பதவிகளை கையேற்றுள்ளார். ஜனாதிபதியின் இந்தநடவடிக்கை பாராட்டுக்குரியது.

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டணி அமைக்கும் நோக்கம் இருக்கிறதா என கேள்வி எழுப்பப்பட்டபோது - அது பற்றி தற்போது எதுவும் கூறமுடியாது எனவும்-

ஐக்கிய தேசிய அரசாங்கத்தின் அரசியல் நடவடிக்கைக்கு எதிராக தனது அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டுமென ஜனாதிபதி எதிர்பார்த்ததுபோல, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளார் எனவும் தெரிவித்தார். (01)

# ஐ.தே.கட்சி எம்.பிக்களின் வெளிநாட்டுப் பயணங்கள் ரத்து

## அமைச்சர் கரு ஜெயசூரியா

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் நாட்டைவிட்டு வெளியேற வேண்டாம் என, அமைச்சர் கருஜெயசூரியா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்ற ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட கலந்துரையாடலிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். நாட்டில் ஓர் அரசியல் நெருக்கடி தோன்றியிருப்பதாலும், பிரதமர் தற்போது அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருப்பதாலுமே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படடுள்ளது.

## ஐ.தே.க.அமைச்சர்களை...

பட்டுள்ளது.

தயாரிக்கப்பட்ட குற்றப்பட்டியலின்படி, முன்னாள் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி ஆயுதக் கிடங்கு தொடர்பான விவகாரத்தில் இராணுவப் புலனாய்வுத் துறையினரின் இரகசியமான மறைவிடங்களை வெளிப்படுத்தியமை தொடர்பாக இவர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவருடன், மேலும் அமைச்சர்கள் தொடர்பான குற்றப்பத்திரங்கள் நேற்று தயாரிக்கப்பட்டது.

குற்றப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ள அமைச்சர்களின் விபரங்களை, கைதுசெய்வதற்காக படையினர் கோரியுள்ளதாகத் தெரியவருகிறது.

இவர்கள் பற்றிய தகவல்களை வெளியிடுவதற்கு ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

## புதிய...

பிக்கை பிரேரணைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது. இதேவேளை ஐக்கிய தேசிய கட்சியின் முக்கிய ஊடகவியலாளர் மாநாடொன்று இன்று நடைபெறவுள்ளதாகவும் -

மகிந்த சமரசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# விடுதலைப் புலிகளுடனான...

பாதுகாப்பு, ஊடகத்துறை, உள்துறை ஆகிய மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்றுள்ளார்.

திருகோணமலை துறைமுகம் மற்றும் அந்தப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் புதிய முகாம்களை அமைத்து வருகின்றமை, விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்கள் ஆகியவற்றினால் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு நெருக்கடிகளை கவனத்தில் கொண்டே பாதுகாப்பு அமைச்சைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளார்.

உள்துறை அமைச்சில் மேற்கொள்ளவேண்டிய திட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தாமையால் அந்த அமைச்சுப் பதவிகளையும் கையேற்றார்.

ஊடகத்துறை அமைச்சை பிழையான வகையில், அந்த அமைச்சு முன்னெடுத்துச் செல்லலாம் என்ற அச்சத்தினாலேயே அதனையும் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார் என, லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் கையளித்துள்ள வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டயோசனைகள் நாட்டின் இறைமையைப் பாதிக்கும் என்றார்.

விடுதலைப் புலிகள் தயாரித்துள்ள திட்டவரைபில் 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நினைவுபடுத்தியமை, இலங்கையின் குடியரசைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படாமை, இலங்கையின் உயர்நீதிமன்றத்தை எந்த இடத்திலும் சுட்டிக்காட்டப்படவில்லை,

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைப் பற்றி குறிப்பிடப்படாமை, இலங்கையின் கடற்பரப்பில் - வங்காள விரிகுடாவின் 200 கடல்மைல் பரப்பை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததுடன் அங்குள்ள வளங்களைச் சுவீகரிக்க முற்பட்டமை என்பற்றைக் காரணம் காட்டி -

★ வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் கோரிக்கை, உரிமைகளை கவனத்தில் எடுக்காமை.

★ தனியான தேர்தல் ஆணையகம் மற்றும் கணக்காளர் நாயகம் நியமித்தல்.

★ வெளிநாட்டு நிதியின் முழுக் கையாள்கையும், திரட்டு நிதியிலிருந்து குறிப்பிட்ட தொகை எதிர்பார்த்தமை.

★ நிலத்தின் பூரணமான உரிமையைக் கோரியமை தொடர்பிலேயே தாம் தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டவரைபுக்கு ஆட்சேபத்தைத் தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இறைமை, நிலவுரிமை தொடர்பில் பங்கீடு செய்யமுடியாது என்றும் அரசியல் அமைப்புக்கு உட்பட்டு அல்லது திருத்தங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியுமென்றும் லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் தெரிவித்தார்.

(01)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.